2018 பெப்ரவரி 05
திங்கள்
விலை: 20/-

ஹிஜ்ரா 1439 ஜமாதுல் அவ்வல் 18 ■ பக்கங்கள் 12 ■ மணி 04 ■ ஒளி 13

NAVAMANI DAILY நவமணி தினபதி

நவமணி

தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

அர்ஜுன் அலோசியஸ் கசுன் பலிஹேன கைது

சி.ஐ.டி. தலைமையகத்தில் வாக்குமூலம் பதிவு
அர்ஜுன் மகேந்திரனை ஆஜராகுமாறு பணிப்பு

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் குற்றம்சாட்டப்பட்டுள்ள பெர்பேஷுவல் டிரஷ்ரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி கசுன் பலிஹேன ஆகியோரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று கைதுசெய்துள்ளனர்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பெர்பேஷுவல் டிரஷ்

11

பைத்தல் முகத்தஸ் சென்ற குழு இன்று நாடு திரும்புகிறது

■ ஜெருஸலத்திலிருந்து எம்.எம்.அமீன்

இலங்கையர்கள் பைத்துல் முகத்தஸை தரிசிப்பதற்கான வாய்ப்புகளை ஆராய நான்கு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு ஜோர்தான் மற்றும் ஜெருஸலம் சென்றிருந்த தூதுக்குழுவினர் இன்று நாடு திரும்பவுள்ளனர்.

இலங்கை பிரயாண போக்குவரத்து துறையில் முன்னணி வகிக்கும் பல நசாப்த அனுபவமிகு த டிரவலர் நிறுவனம் நாட்டில் செயற்பட்டு வருகின்ற பிரபல ஹஜ் உம்ரா முகவர் நிலையங்களின் பிரதானிகள், உலமாக்கள் உள்ளடங்கலாக 48 பேரைக்கொண்ட குழுவினருக்கு ஜெருஸலம் பைத்துல் முகத்தஸுக்கான சுற்றுலா ஒன்றை ஏற்

11

பிணைமுறி விவாதம் நாளை பாராளுமன்றில்

மத்திய வங்கி பிணைமுறி மோசடி மற்றும் பாரிய இலஞ்ச, ஊழல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைகள் தொடர்பான விவாதம் நாளை பாராளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

பாராளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டம் 14 இற்கமைய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் வேண்டுகோளுக்கிணங்கவே பாராளுமன்றம் கூட்டப்படுகின்றதாக சபாநாயகரின் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

11

லெப்டொப் நடனம் மலர்ச் செண்டாக மாற்றம்

■ ஆதில் அலி சப்ரி

இலங்கையின் 70ஆவது சுதந்திர தின நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் கலாசார ஊர்வலத்தில் மடிக்கணனிகளை பயன்படுத்தி மேற்கொள்ளவிருந்த நடனத்தில் மடிக்கணனிகளுக்கு பதிலாக மலர்ச் செண்டுகளை பயன்படுத்தி நடனம் அரங்கேற்றப்பட்டன.

சுதந்திர தின நிகழ்வுகளின் ஒத்திகை நிகழ்வுகளில் மாணவிகள் மடிக்கணனிகளை வைத்துக்கொண்டு நடத்திய நடன நிகழ்வு சமூக வலைத்தளங்களில் விமர்சனத்திற்கு உள்ளானதைவடுத்தே நடனத்திற்கு இவ்வாறு மலர்ச்செண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தொலைநோக்கிகள் மற்றும் மடிக்கணனிகளை கையில் ஏந்திய வண்ணம் இடம்பெற இருந்த இந்நடனம் சனியன்று சமூக வலைத்தளங்களில் பரவியதைவடுத்து லெப்டொப் நடனத்தை நீக்குமாறு கல்வி அமைச்சு பணிப்புரை வழங்கியது.

எனினும் மாணவிகள் நீண்ட காலமாக பயிற்சியில் ஈடுபட்டு வந்த நிலையில் இறுதித் தருவாயில் குறித்த நிகழ்ச்சியை நீக்குவதால் பிரச்சினையென்பதால் மடிக்கணனிகளுக்கு பதிலாக மலர்ச்செண்டுகளை கையில் ஏந்தி மாணவிகள் நடனத்தை அரங்கேற்றினர்.

வெகு விமர்சையாக இடம் பெற்ற 70 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள்

■ ஆதில் அலி சப்ரி

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 70 ஆவது தேசிய சுதந்திர தினம் ஒரே தேசம் என்ற தொனிப்பொருளில் நேற்று கொழும்பு காலி முகத்திடலில் கோலாகலமாக நடைபெற்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனை தலைமையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் பிரசன்னத்துடன் நடைபெற்ற இந்நிகழ்வில், இங்கிலாந்து அரச குடும்பத்தை பிரதிநிதித்துவப்படுத்தி இளவரசர் எட்வெட் மற்றும் அவரது பாரியார் சோபி விசேட அதிதிகளாக கலந்து கொண்டனர்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் அழைப்

பின் பேரில் சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி இரண்டு விசேட பிரதிநிதிகள் குழுக்களும் சுதந்திர தின வைபவத்தில் கலந்துகொண்டன.

உலக நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி அரச பிரதிநிதிகள் பலரும் பங்கு பற்றியதுடன், சபாநாயகர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண ஆளுநர்கள், முதலமைச்சர்கள், அரசாங்க அதிகாரிகள், வெளிநாட்டு தூதுவர்கள் என 3,500 உள்நாட்டு, வெளிநாட்டு பிரதிநிதிகள் வைப

11

சமாதானம் சக வாழ்வை கட்டியெழுப்ப அனைவரும் உறுதி பூணுவோம்

சுதந்திர தின நிகழ்வில் ஜனாதிபதி அழைப்பு

(ஆதில் அலி சப்ரி)

இலஞ்ச மற்றும் ஊழலை ஒழித்து, ஒழுக்க விதிமுறைகளுக்கமைய செயற்படும் தூய்மையான அரசியல் கலாசாரமொன்றை நோக்கி நகர ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்தார்.

நாட்டின் 70ஆவது சுதந்திர தின நிகழ்வில் நாட்டு மக்களை விழித்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் இன, மத பேதம் மறந்து நல்லிணக்கம் உறுதிசெய்யப்படும் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாட்டின் 70ஆவது சுதந்திர தின நிகழ்வுக்கு நலைமை தாங்கி உரையாற்றும்போது ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது,

இன, மத, பேதமற்ற சூழ்நிலையை உருவாக்குவதுடன் சமாதானம், சகவாழ்வை மக்களுக்கு உறுதி செய்வதுடன் மத நல்லிணக்கத்தையும் நம்பகத்தன்மையுடன் வாழும் சூழ்நிலையும் உறுதிசெய்யப்படவேண்டும். இவை அத்தியாவசியமானது என்று நாம் கருதவேண்டும். இதனை கருத்தில் கொண்டு இந்த நாட்டில் உள்ள புத்திஜீவிகள், கல்விமான்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட அனைவரும் செயற்படவேண்டும் என்று இச்சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்ளவிரும்புகின்றேன்.

11

7 மணி முதல் தேர்தல் முடிவுகள்

எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலின் முடிவுகள் அன்று இரவு 7 மணிக்கும் 8 மணிக்கும் இடையில் வெளிவரத் தொடங்கும் என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொகமட் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் வாக்களிப்பு 10ஆம் திகதி, மாலை 4 மணியுடன் முடிவடையும்.

உடனடியாக, அந்தந்த வாக்களிப்பு நிலையங்களிலேயே அந்தந்த வட்டாரத்துக்குரிய வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

தேர்தல் முடிந்து மூன்று, நான்கு மணி நேரங்களில் சிறிய சபைகளின் முடிவுகளை அதிகாரபூர்வமாக அறிவிக்கக் கூடியதாக இருக்கும். எனினும், பெரிய மாநகரசபை

11

மாலைதீவு ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்காத மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லாஹ் யெமீனுக்கு எதிராக சட்டமா அதிபர் குற்றப்பத்திர

11

மாலை தீவு நிலைமை குறித்து விழிப்புடன் உள்ளோம்

பிரதமர் ரணில்

மாலைதீவில் தோன்றியுள்ள நிலைமை தொடர்பாக இலங்கை அரசு விழிப்புடன் இருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாலைதீவில் தோன்றியுள்ள சர்ச்சையை அரசியலமைப்பின் ஊடாக தீர்த்துக் கொள்வதற்கு சகல தரப்பினரும்

11

பெல்லன்வில தேரர் மறைவுக்கு ஜம் இய்யதுல் உலமா அனுதாபம்

கலாநிதி பெல்லன்வில விமலரதன தேரரின் மறைவுக்கு அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா அனுதாபங்களை தெரிவித்துள்ளது.

கலாநிதி பெல்லன்வில விமலரதன தேரர் தாய் நாட்டின் சமாதானத்திற்கும், நல்லிணக்கத்திற்கும் பெரிதும் பங்காற்றி

11



குச்சவெளி பிரதேச சபைக்கு சுல்தான் அஜினாஸ்

குச்சவெளிப் பிரதேச சபைத் தேர்தலில் இறக்கக்கண்டி-வாழைமுந்து வட்டாரத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் முகம்மது சுல்தான் அஜினாஸ் போட்டியிடுகிறார்.

பிரபலசமூகசேவையாளரும் அஜினாஸ் ஹாட்வெயார் நிறுவனத்தின் உரிமையாளருமான இவர் அகில இலங்கைமக்கள் காங்கிரஸ் கட்சியில் இணைந்துமக்களுக்கு பலஉதவிகளைசெய்துவருகின்றார். இறக்கக்கண்டியையும் சின்னக் கரைச்சையும் இணைக்கும் பாலத்தைஅமைத்து இறக்கக்கண்டி-வாழைமுந்து மக்களுடைய விவசாய தொழிலை மேம்படுத்துவதற்கு பலமுயற்சிகளை செய்து எதிர்காலத்தில் பாலத்தை நிர்மாணிப்பதைத் தனது இலக்காகக் கொண்டுள்ளார்.

அல்-ஹறம்றா இளைஞர் கழகத்தின் முன்னாள் தலைவராக இவர் விளையாட்டு,கலைகலாச்சாரவிடயங்களில் பெரிதும் ஈடுபாடுடையவர். அகில இலங்கைமக்கள் காங்கிரசுடன் இணைந்து பல்வேறு அபிவிருத்தி திட்டங்களைவகுத்துமக்கள் நலனுக்காகப் பாடுபடவுள்ளதாக இவர் குறிப்பிடுகின்றார். --திருமலை விசேட நிருபர் எம். ரீ. எம்.பாரிஸ்

அத்தனகலைக்கு பவாஸ்

அத்தனகல்ல பிரதேசசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியகட்சி வேட்பாளராக இல 19 மாதலான வட்டாரத்திற்கு எம்.ஆர்.மொஹமட் பவாஸ் போட்டியிடுகிறார்.

உடுகொடையை பிறப்பிடமாகக்கொண்ட இவர் அல்அரபா மகாவித்தியாலய பழைய மாணவராவார்.

இவர் இப்பகுதி பிரபல தொழில் அதிபரும் சமூக சேவையாளராகவும் செயல்படுவதோடு இப்பகுதி மக்களின் வாழ்க்கைத்தரம் மாணவ மாணவிகளின் கல்வி நிலையை மேம்படுத்தவும் இளைஞர் யுவதிகளின் விளையாட்டு வீரர்களதும் வளர்ச்சிக்கு தனது சொந்த நிதியிலிருந்து செலவிடுவது குறிப்பிடத்தக்கது.

(கம்பஹா மைசர்தீன்)

நாரம்மல பிரதேசசபைக்கு மசூத் மபாஸ்

நாரம்மல பெத்தனிகொடையைச் சேர்ந்த இவர் நாரம்மல பிரதேச சபைக்காக கடஹபொல வட்டாரத்தில் போட்டியிடுகின்றார்.

மதீனா தேசிய பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பெற்றுக் கொண்ட இவர் உயர்கல்வியை வரக்கபொல பாபும் ஹசனில் பயின்றார்.

நாரம்மல பிரதேச சபை இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிர்வாகக் குழு உறுப்பினராக இருந்து பல சமூக சேவைகளில் பங்களிப்புச் செய்து வரும் இவர் தற்போது குருநாகல் பிரதேசத்தில் அமைந்துள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் முகாமையாளராக கடமையாற்றி வருகின்றார்.

நரரம்மல பிரதேச சபைக்கு ஐ.எல்.அப்துல் லதீப்

நுகஹறகெதரையைச் சேர்ந்த இவர் நாரம்மல பிரதேச சபைக்கு கடகபொல வட்டாரத்தில் போட்டியிடுகின்றார்.

நுகஹறகெதர நாராணிய முஸ்லிம் வித்தியாலயத்தில் கல்வி பயின்ற இவர் தற்போது தமது பிரதேசத்தில் தனியார் நிறுவனம் ஒன்றை நடத்தி வருகின்றார்.

முதற்தடவையாக இம்முறை தேர்தலில் போட்டியிடும் இவர் தனது பிரதேசத்தில் பாதைகளைத் திருத்துவது மனிதர் பொதுக் கட்டிடங்கள் அமைப்பது என்று பல வேலைத்திட்டங்களில் அரசியலில் பிரவேசிப்பதற்கு முன்னரே ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

சுயநலம் கொண்ட தனிமனிதனிடம் மு.கா. சிக்கித் தவிக்கின்றது

ஐ.ம. கூட்டமைப்பு தலைவர் ஹசன் அலி

(மைதன் இன்டர்னேசனல்)

அரசியலுடனும், ஆயுதக் குழுக்களுடனும் போராடி வளர்ந்த முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, இன்று சுயநலம் கொண்ட ஒரு தனி மனிதனிடம் சிக்கித் தவிக்கிறது. அதனை மீட்டெடுப்பதே எமது பணியாகும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகமும், ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் தேசியத் தலைவருமான எம்.ரி.ஹசன் அலி தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு சார்பில் நிந்தவூர் பிரதேச சபைக்கு போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நேற்றிரவு (03)நிந்தவூர் புதுநகர் வட்டாரத்தில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

ஐந்தில் ஆறு பெரும்பான்மையுள்ள ஐக்கிய தேசியக் கட்சியுடனும், 17 ஆயுதக் குழுக்களுடனும் போராடி, எத்தனையோ தடவைகள் துப்பாக்கிக் குண்டுகளிலிருந்து தப்பி, பெருத்தியாகங்களுக்கு மத்தியில் வளர்ந்தெடுத்த எமது முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, இதில் எதிலுமே எந்த விதத்திலும் பங்கெடுக்காத ஒரு தனி மனிதனின் அறுவுக்குப்பிடிக்குள் சிக்குண்டு சீரழிகிறது.

இதனை மீட்டெடுத்து, மறைந்த மாமனிதன் அஸ்ரபின் காலத்து யாப்புடனும், கொள்கைகளுடனும் மீண்டும் பயணிக்கவே நாம் இன்று இப்போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறோம். இதற்காக பலர் எங்களுடன் கைகோர்த்து இப்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஸ்ரீ.ல.மு.காங்கிரசிலிருந்து எம்மை யாரும் விலக்கவில்லை. அவ்வாறு விலக்குவதற்கு எவருக்கும் தைரியமுமில்லை. மு.கா. என்னுடைய கட்சி, அது நம்முடைய கட்சி, இந்த மண்ணுக்கும், நமக்குமுள்ள தொடர்பு எவ்வாறானதோ அவ்வாறானதே நமக்கும் மு.காங்கிரசுக்குமுள்ள தொடர்பாகும்.

இந்தக் கட்சியை மீட்டெடுத்து, மழுங்கலை விரட்டியடித்து, இதனைத் தூய்மைப்படுத்தி, மறைந்த மாமனிதன் அஸ்ரப் காலத்து யாப்புடனும், கொள்கைகளுடனும் பயணிக்கவும், இந்தக் கூட்டமைப்பின் தலைமைக் கட்சியாக முஸ்லிம் காங்கிரசை மாற்றியமைப்பதே எமது தேவையாக இருக்கிறது. இப்போராட்டத்திற்கு சந்தர்ப்பம் வழங்கும் தேர்தலாகவே இதனை நாம் பார்க்க வேண்டும்.

எனவே இத் தேர்தல் என்பது, எமது மண்ணை மீட்கின்ற தேர்தலாகவும், மு.கா.கட்சியை மீட்கின்ற தேர்தலாகவும், நம்பகத்தன்மையான தலைமையை விரட்டியடிக்கின்ற தேர்தலாகவும் கருதி, நீங்கள் அனைவரும் இப்போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என நான் உங்களிடம் கேட்கின்றேன். என்றார்

பேருவளை நகரசபை மற்றும் பிரதேச சபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களான தாஜுதீன் அஸன் எம்.ஆரிப், எம். இசாக் கான் ஆகியோருக்கு அமைச்சர் மஹிந்த சமரசிங்க மற்றும் பேருவளை க.கட்சி அமைப்பாளர் எம். எம். அம்ஜாத் ஆகியோர் வேட்பாளர் அத்தாட்சி சான்றிதழ் வழங்குவதை படத்தில் காணலாம் (படம் - பேருவளை நிருபர்)

மஹிந்த தலைமையில் ஹட்டனில் பிரசாரக்கூட்டம்

(ஹட்டன் க.கிஷாந்தன்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் "தாமரை மொட்டு" சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவு தேடும் முகமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரக் கூட்டம் சனியன்று நுவரெலியா நகரில் இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட இக் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டார். இக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவருமான ஜீ.எல்.பீரிஸ், முன்னாள் அமைச்சரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.பி.ரத்நாயக்க மற்றும் முன்னாள் நுவரெலியா மாநகரசபை முதல்வரும் வேட்பாளருமான மஹிந்த தொடங்பேகமகே, மலையக தேசிய முன்னணி தலைவர் ரிஷாத் செந்தில்ராஜ் உள்ளிட்ட ஊவா மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இனவாதத்திற்கு எதிராக தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்பவேண்டும்

அநுரகுமார திஸாநாயக்க

(கஹட்டோவிட்ட நிஷ்மி)

70 வருட இலங்கையின் அரசியல் வரலாற்றில் இந்த மக்களுக்கு அரசியல் சாபமான வொன்றாக மாறியிருக்கிறது. அதாவது, யார் வென்றாலும் ஒன்றுதான் என்ற மனநிலை. காரணம் கொள்ளை, ஊழல் அதில் மலிந்திருப்பதனாலே இன்று கொள்ளையர்கள் ஆட்சியாளர்களாகிறார்கள் என எதிர்க் கட்சியின் பிரதம கொறடாவுமான அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அத்தனகல்ல பிரதேச சபைக்கு, வட்டார இலக்கம் 24 கஹட்டோவிட்டவிலிருந்து மணி சின்னம் சார்பாக மக்கள் விடுதலை முன்னணியில் போட்டியிடும் இன்சாப்பை ஆதரித்து வெள்ளியன்று ஒகொடபொல பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடு இல்லாமல் நாம் ஒன்றுபட வேண்டும். எங்களுக்கு சரியான வாழிடம் இல்லை, சிறந்த சுகாதார சேவை இல்லை, சிறந்த கல்வி இல்லை, சிறந்த தொழிலில்லை. ஆனால் இவை அனைத்தும் அரசியல்வாதிகளுக்கு இருக்கிறது. இங்கு இருப்பது சிங்கள, தமிழ், முஸ்லிம் அல்லது ஐதேக, சுக, ஜேவிபி என்ற பேதமல்ல. மாறாக உயர் வகுப்பினர், கீழ் வகுப்பினர் என்ற இரு பிரிவினரே. அவர்கள் உயர் வகுப்பினர். நாம் தாழ் வகுப்பினர். நாம் கட்சி, இன வேறுபாடுகளை மறந்து மேற்கூறிய உயர் வகுப்பினருக்கு எதிராக ஒன்றுபடுவோம். அவர்களை இந்த வகுப்பினருக்குக் கீழ் கொண்டு வர நீர்வொன்றைப் பெறவேண்டும். இனவாதங்களை நாம் வளர்க்கக்கூடாது. வடக்கில் தமிழ் கீழ் வகுப்பினருக்கு இனவாதம் ஊட்டப்பட்டது. தெற்கில் சிங்கள கீழ் வகுப்பினருக்கு இனவாதம் ஊட்டப்பட்டது. கடைசியில் மாபெரும் யுத்தம் மூண்டது. கடைசியில் இறந்தது மேல் வகுப்பினரின் பிள்ளைகளா? இல்லை. அனைவரும் கீழ் வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

இனவாதத்திற்கு எதிராக தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்ப வேண்டும்.

நாட்டில் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகள் உள்ளன. அவர்களுக்கு விரும்பிய மொழியில் கல்வி கற்கலாம்.. இரு மொழிகள் இருந்தால், அதனைப் பேசுபவர்களுக்கு அந்தந்த மொழிகளில் நடவடிக்கைகளில் ஈடுபட உரிமை உள்ளது. அந்த சமவுரிமையை ஏற்றுக் கொண்ட அரசியற்கொள்கை ஜேவிபி யிடம் இருக்கிறது. அதன் மூலம் ஒற்றுமையை கொண்டு வர முடியும் என்றார்.

சர்வதேசநாடுகளின் ஒத்துழைப்போடு இலங்கை நாட்டுக்கு அபிவிருத்தி

அமைச்சர் மங்கள சமரவீர

(வெலிகம நிருபர்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல், தற்போது பதவி வகிக்கும் ஆட்சியிலிருந்தாக அபிவிருத்திப் பணிகளை மேற் கொள்ளக் கூடிய நகர, மற்றும் பிரதேச சபை தேர்ந்தெடுக்கும் தேர்தலே இது என நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

வெலிகம கல்பொக்கை வட்டாரத்தில் நகர சபைக்கு ஐ.தே.கட்சி சார்பில் போட்டியிடும் எம்.ஜே.எம். மின்ஹாஜின் வெற்றியை உறுதி செய்யும் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் இலங்கை நாட்டை அபிவிருத்தி செய்ய ஐ.தே.கட்சி உறுதி பூண்டுள்ளது. இன்று நாம் முகம் கொடுப்பது புதிய தேர்தல் முறைமை. தொகுதி வாரியாக தத்தமது பிரதேசங்களுக்கு உறுப்பினர்களை தெரிவு செய்து கொள்ள முடியும்.

தற்போதைய அரசாங்கத்திலிருந்தாக நிதி உதவிகளைப் பெற்று விதிகள் அமைத்தல், முடப்பட்டுக்கும் மகப்பேற்று வைத்தியசாலையை மீண்டும் இயங்க வைத்தல், நீர் விநியோகத் திட்டங்களை மேற் கொள்ளல், மற்றும் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்தல் போன்ற சேவைகளை செய்யக் கூடிய நகர சபையைத் தெரிவு செய்ய வேண்டும். அவ்வாறாயின் எதிர்வரும் 10ஆம் திகதியானவர் சின்னத்துக்கு வாக்களித்து வெலிகம நகர சபையை ஐ.தே.கட்சி நகர சபையாக தெரிவு செய்ய வேண்டும். வெலிகமவிலிருந்து ஹம்பாந்தோட்டை வரை நீர் விநியோகத் திட்டமென்றை ஆரம்பித்துள்ளோம். இந் நிகழ்வில் வெலிகம தேர்தல் தொகுதி ஐ.தே.கட்சி அமைப்பாளர் கயான் சஞ்சீவ, ஐ.தே.கட்சி சார்பில் வெலிகம நகர சபைக்கு போட்டியிடும் வேட்பாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

எகிப்தில் இலங்கை சமயப் போதகர்களுக்கு இரண்டு மாத பயிற்சி கற்கைநெறி

இலங்கையில் உள்ள எகிப்திய தூதுவராலயம் இலங்கையில் உள்ள இமாம்கள், மௌலவிமார்களுக்கு தமது நாட்டில் உள்ள கெய்ரோ அல்-அஸ்ஹர் பல்கலைக்கழகத்தில் 2018.2019.ஆம் ஆண்டுகளில் இரண்டு மாதங்களைக் கொண்ட 50 புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

இதன்படி இக்கற்கை நெறிகளில் சமயப் போதகர்களை தெரிவு செய்து தருமாறு இலங்கையில் உள்ள எகிப்திய தூதுவராலயம் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திடம் கோரியுள்ளதாக திணைக்களப் பணிப்பாளர் எம்.ஆர்.எம்.மலிக் தெரிவிக்கின்றார்.

கற்கை நெறிகளுக்காக அறபுக் கல்லூரிகளில் இருந்து ஏற்கெனவே விண்ணப்பங்கள் கோரப்பட்டடுள்ள போதிலும் குறைவான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதால் அரபு மொழியில் தேர்ச்சியுடையவர்கள் (அரபு மொழியை சரளமாக பேசக்கூடியவர்கள்) இம்மாதம் 22ஆம் திகதிக்கு முன்னர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு கோருகின்றது. இக்கற்கை நெறிகளுக்காக திணைக்களத்திற்கு விண்ணப்பிப்பவர்களுக்கான தெரிவினை இலங்கையில் உள்ள எகிப்திய தூதுவராலயமே மேற்கொள்ளும் எனவே தகுதியானவர்கள் காலதாமதமின்றி விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும் பட்சத்தில் 2018.07.01 தொடக்கம் 2019.06.30ஆம் திகதிகளுக்கு இடையில் நடாத்தப்படும் கற்கை நெறியில் பங்குபற்றிக் கொள்ளலாம்.

இக்கற்கை நெறிகளுக்கு தெரிவு செய்யப்படுபவர்களுக்கு தங்குமிட வசதிகளையும், உணவு விடயங்களையும் எகிப்திய அரசு பொறுப்பேற்கவுள்ளதுடன் எகிப்திற்கு சென்று வருவதற்கான விமாப் பயணச் சீட்டுக்கான செலவுகளை உரியவர்களே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

குறித்த விடயங்கள் தொடர்பான மேலதிக விளக்கங்களை திணைக்களத்தின் 011-2669997 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

அக்கரைப்பற்றில் தேர்தல் வன்முறைகள் அதிகரிப்பு

(அக்கரைப்பற்று விசேட நிருபர்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் 5 நாட்களே உள்ள நிலையில் அக்கரைப்பற்றில் தேர்தல் வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

நேற்றைய தினம் அக்கரைப்பற்று மாநகர சபைத்தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாகப் போட்டியிடுகின்ற காதிரியா வடக்கு வேட்பாளர் வ.டி. கனகல் என்பவர் தேசிய காங்கிரஸ் ஆதரவாளர்களால் தாக்கப்பட்டு அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அதேநேரம் அக்கரைப்பற்று பலாஹ் வட்டாரத்தில் போட்டியிடுகின்ற ஏ.சி.நுஸ்மானவர்கள் தேர்தல் கள வேலையில் ஈடுபட்டிருந்தபோது கூரிய ஆயுதங்களுடன் வந்து அவரை மிரட்டியதாகவும் அங்கிருந்து தப்பித்து வந்து பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். மேலும் இவ்வாறான வன்முறைச்சம்பவங்கள் அக்கரைப்பற்றில் முன்னாள் அமைச்சரின் ஆதரவாளர்களால் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதனை உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தடுத்து நிறுத்துமாறு பொதுமக்களும் ஏனைய கட்சி வேட்பாளர்களும் கேட்டுக்கொள்கின்றனர்.

மருதமுனை அந்-நஜ்லா கல்லூரியின் சுதந்திரதின விழா

(பெரியநீலாவணை- ஏ.எல். எம்.ஷினாஸ்)

70ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மருதமுனை அந்-நஜ்லா அரபுக் கல்லூரி மாணவர்கள் ஏற்பாடு செய்த சுதந்திர தின நிகழ்வு நேற்று மருதமுனை கடற்கரை திறந்த வெளியில் நடைபெற்றது.

கல்லூரின் தலைவர் சட்டத்தரணி ஏ.எம்.பதுறுத்தீன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாணவர்கள் இலங்கை தேசியக் கொடியை தாங்கிப் பிடித்தவாறு தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

இந்த நிகழ்வில் சட்டத்தரணி ஏ.ஜீ. பிரேம் நபாத் பிரதம அதிதியாக கலந்து கொண்டு "இலங்கையில் சுதந்திர தினம்" எனும் தலைப்பில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு உரையினை நிகழ்த்தினார்.

கல்லூரியின் அதிபர் அஷ்செய்க் ஏ.அபூ உபைதா, விரிவுரையாளர் அஷ்செய்க் எம்.எம்.அகமது அன்சார் மௌலானா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

துறைமுக நகரத்திட்டத்தால் கொழும்புக்கு பாதிப்பில்லை

சம்பிக ரணவக

துறைமுக நகரத்திட்டத்தால் கொழும்பு நகரம் தாழிறங்காதென அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

எனினும் கட்டடங்கள் சிலவற்றிற்கு பாதிப்பு ஏற்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தன்னுடைய உத்தியோகபூர்வ பேஸ்புக் வலைதளத்திலேயே அமைச்சர் சம்பிக்க இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

அத்துடன், மண் நிரப்பப்படுவதால் நீர்மட்டம் அதிகரிக்குமெனவும் அமைச்சர் பதிவிட்டுள்ளார்.

நிலத்தடியில் கீழ் இணைக்கப்படாத கட்டடங்கள் இவ்வாறு பாதிப்பை எதிர்நோக்குமென்றும் அவ்வாறான கட்டடங்களாக பழைய பாராளுமன்றக் கட்டடம், ஜனாதிபதி செயலகம், தபால் கட்டடம் ஆகியன இவ்வாறான ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாக கட்டுக் காட்டப்பட்டுள்ளது.

துறைமுக நகரில் 238 ஹெக்டயருக்கு வெளியே இருந்து கொண்டு வரப்பட்டு மண் நிரப்பப்பட்டுள்ளதால் கண்டிப்பாக நீர்மட்டம் அதிகரிக்குமெனவும் இதிலிருந்து கட்டடங்களைப் பாதுகாக்க கால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் கட்டடங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதால், சில பாதிப்புக்கள் தற்போதே ஏற்பட வேண்டும். எனினும் அவ்வாறான பாதிப்புக்கள் எதுவும் இதுவரை ஏற்படவில்லை.

எதிர்காலத்தில் இப்படி நடக்காது என்றும் கூறமுடியாது. அதற்கும் நாம் தயாராகவிருக்க வேண்டும். துறைமுக நகரங்களின் கட்டடங்கள் நிலத்தடி கீழ் இணைக்கப்பட்டுள்ளதால் கட்டடங்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படாதெனவும் இவ்வாறு ஏதாவது பாதிப்புக்கள் ஏற்படுவதை முன்கூட்டியே அறியும் நவீன உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தனது பேஸ்புக் வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் பிரஜா உரிமை வாழ்நாள் முழுவதும் நீக்கப்பட வேண்டும்

பிரதியமைச்சர் அஜித் பி. பெரேரா

ஜனாதிபதி ஒருவருக்கு எதிராக அவர் பதவியில் இருக்கும் காலத்திலேயே வழக்குத் தாக்கல் செய்ய முடியாது என்றும் பதவியில் இருந்து விலகிய தன் பின்னர் வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என்றும் பிரதியமைச்சர் அஜித் பி. பெரேரா கூறியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார். அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

ஜனாதிபதி ஒருவர் பதவியில் இருக்கும் போது தான் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியாது.

அவர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் பதவி நீக்கப்பட்டதன் பின்னர், அல்லது ஓய்வு பெற்றதன் பின்னர், அல்லது தேர்தல் தோல்வியின் மூலம் பதவியில் இருந்து விலகிய பின்னர் முன்னர் இழைத்த குற்றங்களுக்காக வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

குற்ற வழக்கொன்றில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டால் மஹிந்த ராஜபக்ஷவுக்கு கிடைக்கின்ற தண்டனை 07 வருட காலத்துக்கு பிரஜா உரிமை நீக்கப்படுவது மாத்திரமே.

எனினும் அது போதாது. அதன் காரணமாக வாழ்நாள் பூராகவும் பிரஜா உரிமையை நீக்குவதற்கான புதிய சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று அரசியல் தலையீடற்ற ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது என்று பிரதியமைச்சர் அஜித் பி. பெரேரா கூறியுள்ளார்.

லசந்த விக்ரமதுங்க கொலை வழக்கில் மூன்று காவல்துறை அதிகாரிகளுக்கு வெளிநாடு செல்ல தடை

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொலை சம்பவம் தொடர்பில் முன்னாள் காவல்துறைமா அதிபர் ஜயந்த விக்ரமரத்ன உள்ளிட்ட 3 முன்னாள் உயர் மட்ட காவல்துறை அதிகாரிகளுக்கு வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

கல்கிஸ்லை நீதவான் நீதிமன்றினால் இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த கொலை சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட கல்கிசை காவல்நிலையத்தின் குற்றவியல் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி நில்ல ககதபால எதிர்வரும் 16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்று இரவு குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் கல்கிசை நீதவானிடம் முன்னிலைப்படுத்தியபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, குற்றப்புலனாய்வு அதிகாரிகளால் நீதவானிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கையொன்றின் அடிப்படையில் மூன்று உயர்மட்ட காவல்துறை அதிகாரிகளுக்கான வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

லசந்த விக்ரமதுங்க கொலை சம்பவத்தின் ஆதாரங்களை அழித்ததாக முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் கல்கிசை காவல் நிலைய குற்றவியல் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி கைதுசெய்யப்பட்டார்.

தம்புத்தேகம விபத்தில் 4 பேர் பலி

தம்புத்தேகம, கல்லேவ வீதியில் நில்பனேபுர பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் சிறு குழந்தை உட்பட 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

முச்சக்கர வண்டியுடன் சிறியரக லொறி ஒன்று மோதுண்டதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த நால்வரும் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் ஏழு வயதான ஆண் குழந்தையொன்றும் உள்ளடங்குகிறது.

விபத்து தொடர்பில் தம்புத்தேகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அலிஸாஹிர் மௌலானாவிற்கு எதிராக பெண்ணொருவர் நிதிமோசடி வழக்கு

(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹஸனலி)

பெற்ற கடனை முழுமையாக திருப்பிச் செலுத்தத் தவறியதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானாவுக்கு எதிராக பெண்ணொருவரினால் நிதிக் குற்றச்சாட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்டு தற்போது அமெரிக்காவில் வசித்து வரும் அஞ்சலா கிறிஸ்டின் மவில்வாகனம் என்பவர் தனது சட்டத்தரணியூடாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

கடுவெலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கின் ஆரம்ப விசாரணையை எதிர்வரும் ஜூலை மாதம் 13ஆம் திகதி நடத்துவதற்கு நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா 2006ஆம் ஆண்டு காலப்பகுதியில் தன்னிடம் 150,000 (ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம்) அமெரிக்க டொலர்களை கடனாகப் பெற்றுக்கொண்டதாகவும் அக்கடன் தொகையில் இன்னமும் 75,981 அமெரிக்க டொலர்களை அவர் திருப்பிச் செலுத்தவில்லை எனவும் அமெரிக்கவாழ் பிரஜையான குறித்த பெண்மணி தனது முறைப்பாட்டில் கூறியுள்ளார்.

எனவே, தனக்கு வழங்க வேண்டிய மிகுதிப் பணம், வழக்குச் செலவு மற்றும் பணத்திற்கான 10 சதவீத வட்டி என்பவற்றையும் பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா திருப்பிச் செலுத்த வேண்டும் என முறைப்பாட்டாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பில் வேறு கட்சிகளுடன் கூட்டுச் சேராது மட்டக்களப்பு மாவட்டத்தில் தனித்து போட்டியிட்டு வெற்றியீட்டி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற நாமத்தோடு உள்ள அலிஸாஹிர் மௌலானா தற்போது இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அவரது ஆதரவாளர்களான ஒரு குழுவினரை ஏறாவூர் நகர சபைக்காக தராக சின்னத்தில் களமிறக்கியுள்ளார்.

இதேவேளை ஸ்ரீலமுகா கூட்டுச் சேர்ந்துள்ள ஐ.தே.கவுக்கு எதிராக அவரும் அவரது அணியினரும் பிரச்சாரம் செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

NAVAMANI DAILY
நவமணி
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
05TH JANUARY 2018 - MONDAY

உண்மையான நல்லாட்சி தொடர்ந்தும் நிலைக்க...

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை நிறைவுக்கு கொண்டுவந்த ஜனவரி 8 மாற்றத்திற்கு மூன்று வயது தாண்டிவிட்டது. நல்லாட்சி அரசாங்கத்தில் கைகோர்த்த நாட்டின் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆகியவைகளின் உடன்படிக்கைக் காலமும் நிறைவடைந்துள்ளது. இந்நிலையில் இந்த உள்ளூராட்சிமன்ற தேர்தல் நாட்டில் எவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்தும் என்ற கேள்வி பெரிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தின் பங்குதாரர்களான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆகியன ஆரம்பத்தில் ஒன்றிணைந்தே செயற்பட்டு வந்தன. கட்சி விமர்சனங்களை தவிர்த்து நாட்டின் பொது நலன்களை கருத்திற்கொண்டு இயங்குவதாகவே தெரிந்தன. இலங்கைக்கு சர்வதேசத்தின் ஆதரவும் அங்கீகாரமும் பெருகத் தொடங்கின. கடன் கலமையை குறைத்து, பொருளாதார அபிவிருத்தி, நல்லாட்சி, இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் என்பன குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டது.

இவ்வாறிருக்கையில் நாடு இப்போது தேர்தலொன்றை எதிர்கொண்டுள்ளது. பங்காளிக் கட்சிகள் இரண்டும் ஒன்றையொன்று விமர்சித்துக்கொள்ள ஆரம்பித்துள்ளன. இரு கட்சிகளுக்குமே பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இல்லாத நிலையிலும் தனி அரசாங்கம் அமைக்கப்போவதாக பிரமல்மாக அறிக்கைவிட்டு வருகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியின் மீது முன்வைக்கப்பட்ட பிரதான குற்றச்சாட்டே ஊழலாகும். இவ்வாறிருக்கையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பிணைமுறி விடயத்தில் ஊழல் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. ஊழல் ஒழிக்க வந்தவர்கள் ஊழலில் ஈடுபட்டுள்ளனர் என்ற பிரசாரங்கள் ஓங்கிவருகின்றதைக் காண்கின்றோம்.

நல்லாட்சி அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்ல ஊழல் அற்றவர்களை இணைத்துக்கொண்டு பயணிப்பது குறித்து தேர்தலின் பின்னர் சகல தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் நவமணிக்கு வழங்கிய தேர்காணலொன்றில் தெரிவித்திருந்தார். ஐக்கிய தேசியக் கட்சி, தாம் எந்த ஊழலிலும் ஈடுபடவில்லை என்றும் கட்சிக்காரர்கள் ஊழலில் தொடர்புபட்டிருப்பின் உரிய நடவடிக்கைகளெடுக்கப்போவதாகவும் தெரிவித்துள்ளது.

இலங்கையில் நல்லாட்சியின் செயற்பாடுகளை பலப்படுத்த அவுஸ்திரேலியா 3,850 மில்லியன் ரூபாய் நிதி உதவியை கடந்த வாரம் வழங்கிவைத்தது. சர்வதேசத்தின் ஆதரவு பெருகிவருகின்றதற்கான உதாரணங்களே இவை. நாட்டின் பொருளாதார அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு, தரமான கல்வி, நல்லாட்சி, நல்லிணக்கம் என அனைத்துமே கட்சிபேதமின்றிய இணக்கப்பாட்டு அரசியலிலேயே சாத்தியமாகின்றது.

இரு கட்சிகளிலும் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் தீர்க்கப்பட வேண்டும். ஊழலுக்கெதிரான போருக்கு ஐக்கிய தேசியக் கட்சியும் ஆதரவு வழங்கவேண்டும். குறுகிய அரசியல் இலாபங்களுக்காக விமர்சனங்கள் தவிர்க்கப்பட வேண்டும். நல்லாட்சியொன்றின் ஆரம்பமென கூறி ஆட்சிபீடமேறியவர்கள் நல்லாட்சியை நிலைக்கச் செய்வதில் இணைந்து செயற்பட வேண்டும். அதன் மூலமே நல்லாட்சிக்கெதிரான ஊழல் பெருச்சாளிகளை தோல்விபயடையச் செய்யலாம். ஊழலற்ற அபிவிருத்தியை இலக்காகக்கொண்ட தேசமொன்றை உருவாக்கலாம். உண்மையான நல்லாட்சியை உறுதிசெய்ய ஆட்சியாளர்கள் திடசங்கற்பம் பூணவேண்டும்.

சாய்ந்தமருது விவகாரம்:

தவறிழைத்தார்களா? முஸ்லிம் தலைவர்கள்

எம்.எம்.எம். நாறுல்ஹக்
சாய்ந்தமருது - 03

கடந்த 24.01.2018இல் ஒளிபரப்பான வசந்தம் தொலைக்காட்சியின் அதிர்வு நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் றிஷாத் பதியுதீன் பல்வேறு விடயங்கள் பற்றி தமது அரசியல் நிலைப்பாடுகள் குறித்து கருத்துக்களை வெளிப்படுத்திய சந்தர்ப்பத்தில், சாய்ந்தமருதுக்கான தனியான உள்ளூராட்சி மன்றம் ஒன்றினை தாபிப்பது தொடர்பான அறிவிப்பாளரின் வினாவுக்கு விடையளிக்கையில் பின்வரும் கருத்துப்பட தமது விளக்கங்களை முன்வைத்திருந்தார்.

'சாய்ந்தமருது மக்களுக்கு தனியான உள்ளூராட்சி சபையை வழங்குவது தொடர்பில் நீண்டகாலமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸோடு சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளிவாசல் தொடர்பை வைத்திருந்தது. இந்நிலையில், உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபாவை நாம் சந்தித்து இவ்விடயத்தை துரிதப்படுத்தும் வகையில் அவ்வூரைச் சேர்ந்த முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீலின் வேண்டுகோளுக்கு இணங்க இச்சந்திப்பு நிகழ்ந்தது. அதன் பிற்பாடு எதிர்வரும் 28.08.2017 இல் வர்த்தமானி அறிவித்தல் வெளிவர இருப்பதாக அறிவித்திருந்தார். அச்சந்தர்ப்பத்தில் கல்முனைக்குடி சமூகத்தை சேர்ந்த பல புத்திஜீவிகள் என்னை சந்தித்து இந்த வர்த்தமானி அறிவித்தலை இடைநிறுத்த வேண்டுமென கேட்டுக்கொண்டனர்.

அவர்களின் கருத்துக்களை கேட்டபின்னர்தான் சாய்ந்தமருதுக்கு தனியான உள்ளூராட்சி மன்றம் பிரிப்பதில் பல சிக்கல்கள் இருப்பது தெரிய வந்தது. இவ்வளவு பிரச்சினை அதில் இருப்பதுபற்றி நான் முன்னர் அறிந்திருக்கவில்லை. அதனுடைய ஆழத்தை புரியாது ஜெமீலின் வேண்டுகோளுக்காக நான் அமைச்சர் பைசர் முஸ்தபாவை சந்தித்தும் தவறை செய்திருப்பதாகவும் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். அத்தோடு அம்மக்களின் விருப்பத்திற்கிணங்க நாம் நடைபெறப்போகின்ற இந்த உள்ளூராட்சி (2018) தேர்தலில் நேரடியாக போட்டி வேட்பாளர்களை நிறுத்தாது, தவிர்த்து கொண்டேன். நான் ஓர் அமைச்சர் என்ற வகையிலோ அல்லது நான் ஒரு கட்சியின் தலைவர் என்ற அடிப்படையிலோ அந்த மக்களின் வேண்டுகோளுக்கு எதிராக எனது கட்சியை நிறுத்தி அங்கு ஒரு கலவர சூழலை தோற்றுவிக்க நான் விரும்பவில்லை.' என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் கடந்த 18.01.2018 இல் இங்கு வருகை தந்த உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா, "சாய்ந்தமருதுக்கென தனியான உள்ளூராட்சி மன்றம் தொடர்பில் இன்றும் ஜனாதிபதியுடன் பேசிவிட்டு வந்திருக்கின்றேன். இது உங்களுக்கு கிடைக்கும். இந்த விவகாரத்தை வைத்து அரசியல் செய்யவேண்டிய தேவை எனக்கில்லை. உங்கள் மத்தியில் வந்து அரசியல் செய்கின்ற அமைச்சர்களான ரஹூப் ஹக்கீம், றிஷாத் பதியுதீன் போன்றோர்கள்தான் இவ்விடயத்தில் அரசியல் செய்கின்றனர்.

அவர்கள் இருவரும் ஒருமித்துச் சொன்னால் நான் சாய்ந்தமருதுக்கு உள்ளூராட்சி மன்றத்தை வழங்குகின்றேன் என்று கூறியும் அவர்கள் அதற்கு இணங்கி செயற்படவில்லை. எங்களிடம் ஒன்றையும், உங்களிடம் இன்னொரு கருத்தையும் சொல்லுகின்ற அவர்களைத்தான் நீங்கள் கேள்விக்குட்படுத்த வேண்டும்." என்கின்ற தோரணையில் தனது கருத்தை விரித்து சென்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்விரு அமைச்சர்களும் சாய்ந்தமருதுக்கென்று தனியாக உள்ளூராட்சி சபையை முன்னிலைப்படுத்தி வழங்குவதில் சிக்கல் இருப்பதாக கல்முனைக்குடி தரப்பினர்கள் முன்வைத்த கருத்தை சரிகண்டும், அவர்களின் புதிய கோரிக்கையான கல்முனை மாநகர சபை ஒரே நேரத்தில் தான்காக பிரிக்கப்பட வேண்டும் என்ற விண்ணப்பத்தையும் ஏற்றுக்கொண்டவர்களாகவே இவர்களது மேற்படி கருத்துக்கள் காட்டிக்காட்டுகின்றன.

கல்முனை மாநகர சபையிலிருந்து சாய்ந்தமருதுக்கென உள்ளூராட்சி மன்றத்தை வழங்குவதில் பாரிய சிக்கல் இருப்பதாக அல்லது கல்முனை முஸ்லிம்களுக்கு பாதிப்பு இருப்பதாக சொல்லப்படுகின்ற கருத்தாடலில் மீது உண்மை இருக்கின்றது. என்பதை அமைச்சர்கள் ஏற்றுக்கொண்டதைத்தான் இது ஆதாரப்படுத்துகின்றது. அப்படியென்றால், இதற்குமுன்னர் 21.10.2016இல் இவ்விரு அமைச்சர்களும் சாய்ந்தமருதுக்கு வருகை தந்து ஒரே மேடையில் 'சாய்ந்தமருதுக்கான தனியான உள்ளூராட்சி மன்றத்தை நான் விரைவில் தருவேன் என்னை நம்புங்கள்' என அமைச்சர் பைசர் முஸ்தபாவும், 'உள்ளூராட்சி மன்றத்தேர்தல் ஒன்று நடக்குமானால், அது சாய்ந்தமருதுக்கான தனியான உள்ளூராட்சி சபை ஸ்தாபிக்கப்பட்டு அதற்குமான ஒரு தேர்தலாகவே நாம் கொண்டுவருவோம்' என இட்டவட்டமாக அமைச்சர் றிஷாத் பதியுதீனும், அறிவித்திருந்தார்.

அந்தநேரத்தில் இவ்விரு அமைச்சர்களுக்கும் சாய்ந்தமருதுக்கென தனியான உள்ளூராட்சி மன்றத்தை வழங்கினால், கல்முனையில் பாதிப்புக்கள் வருமென்பது தங்களுக்கு தெரியாதென்று இன்று நாம் எடுத்து நோக்கத்தக்கதாகும்.

உண்மையில் பிரதி அமைச்சர் அமீர் அலி மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த ஒருவராவார். இவருக்கு மிக அண்மிய பகுதியாகவே கல்முனை மாநகர சபை எல்லை அமைந்திருக்கின்றது. அது மாத்திரமன்றி அம்பாறை மாவட்டத்திற்கான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் செயற்படுகின்ற அதிகாரத்தையும் அக்கட்சி அவருக்கு வழங்கியிருத்தமை குறிப்பிடத்தக்கது. அப்படியென்றால், தனது பராமரிப்புக்குட்பட்ட அம்பாறை மாவட்டத்தில் அமைந்திருக்கும் கல்முனை மாநகர சபை எல்லையிலிருந்து சாய்ந்தமருது தனியாக பிரிந்து சென்றால் ஆபத்து நேருமென்பதை அவரும் அறியாமலிருந்தார் என்பதையே இவை நமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

சொல்வது இவ்விரு அமைச்சர்களுக்கும் பொருத்தமான செயற்பாடல்ல. ஏனெனில், உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் என்ற வகையில் புதிதாக வட்டார எல்லை நிர்ணயங்கள் வகுக்கப்பட்டபோது, கல்முனை மாநகர சபையிலிருந்து சாய்ந்தமருது பிரிந்து சென்றால், கல்முனை நகரின் முஸ்லிம்களின் அரசியல் அதிகாரம் கைவிட்டுப்போய்விடும் என்கின்ற அச்சம் விளங்காத ஒருவராக தன்னை இன்று காண்பிப்பதென்பது தனது அமைச்சின் துறை சார்ந்த விடயத்தில் தனக்கு போதிய விளக்கமின்மை இருந்தது என்பதை ஒப்புவிப்பதாக ஆகாதா? அதுமட்டுமன்றி முஸ்லிம் சமூகத்தின் மீதான தனிப்பட்ட அக்கறை இல்லாதவர் என்ற மதிப்பீட்டை அவர் மீது பதிவாக்காதா?

முஸ்லிம் சமூகத்தின் விடுதலைக்காக அல்லது இந்நாட்டில் வாழ்கின்ற முஸ்லிம்கள் பாதிப்படைந்துவிடக்கூடாது என்பதற்காக அரசியல் செய்வதற்கென்று அதுவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்கின்ற ஒரு தனிக்கட்சி இருக்கின்ற நிலையில், அவை தனது கடமைகளை சரியாக செய்யவில்லை என்பதற்காக மாற்றுத் தலைமையை வழங்குவதற்கு முன்வந்த அமைச்சர் றிஷாத் பதியுதீன் கல்முனை மாநகர சபையிலிருந்து சாய்ந்தமருது தனியாகப் பிரிந்து சென்றால் முஸ்லிம் மக்களின் அரசியல் ஆதிக்கம் கல்முனை மாநகர சபையிலிருந்து பறிபோய்விடும் என்கின்ற முன்னிலிபர அடிப்படை தகவல்கள் கூட இல்லாமலிருந்தார் என்று அர்த்தப்படாதா?

இவரது கட்சி சார்ந்த இன்னொரு பிரதி அமைச்சரான அமீர் அலி கூட கடந்த 03.01.2018இல் ஒளிபரப்பான அதிர்வு நிகழ்வில் கலந்துகொண்டு, கல்முனையில் இத்தகைய சிக்கல்கள், பிரச்சினைகள் இருப்பதை நாம் முன்னர் விளங்கவில்லை என்ற வகையில் கருத்து தெரிவித்திருந்தமையும் இவ்விடத்தில் எடுத்துக்காட்டுகின்றது.

சாய்ந்தமருது பிரிந்தால் தமிழ் மக்களிடம் கல்முனை மாநகர சபையின் அரசியல் அதிகாரம் சென்றுவிடும் என்பதை இன்று ஏற்றுக்கொள்ளும் இவர்கள் அது உண்மைதான் என்பதை திருப்திகும் வகையில் எந்த புள்ளிவிபரங்களையோ, ஆய்வு ரீதியான கருத்துக்களையோ இதுவரை முன்வைக்கவில்லை. இவர்கள் இன்று முடிவுக்கு வருவதற்கு காரணமாக அமைந்த கல்முனைக்குடி சமூகத்தினர்கள் கூட இவ்வாறு அறிவுபூர்வமாக எந்த ஆதாரங்களையும் முன்வைக்காது வெறுமனே பாதிப்பு வருமென்கின்ற அவர்களின் வார்த்தையை நம்பி அவர்களை சரி காண்கின்ற நிலைக்கு இன்று இவர்கள் வந்திருப்பது ஒரு விவேகமான வழிமுறையாகவோ அல்லது நியாயமானதாகவோ இராது என்பதை மிக எளிதாகவே புரிந்துகொள்ள முடியும்.

சாய்ந்தமருது மக்கள் யார்? அவர்களும் முஸ்லிம்கள்தான். தமக்கு அருகில் வாழ்கின்ற கல்முனைக்குடி முஸ்லிம் மக்களுக்கு பாதகத்தை அல்லது கல்முனை முஸ்லிம்களின் அரசியல் அதிகாரத்தை இல்லாமல் செய்து, தமிழர்களின் அரசியல் ஆதிக்கத்தை கொண்டுவருவதற்கு துணைபோக கூடியவர்கள் என்று சாய்ந்தமருது மக்களை பார்ப்பது எந்த வகையில் சரியானது என்கின்ற ஒரு கேள்வி இவ்விடத்தில் இருப்பதை புரிந்தால் இம்மக்களின் வேண்டுகோள் பாதகமானது அல்ல என்பதை விளங்கிக்கொள்வதில் எந்தக் குழப்பமும் இராது என்பது மிகப் பிரத்தியட்சமானது.

சாய்ந்தமருதுக்கான தனியான உள்ளூராட்சி சபை வழங்குவது தொடர்பில் நியமிக்கப்பட்ட குழு அதனை ஏற்று சிபாரிசு செய்த நிலையில், அவ்வாறு வழங்கப்படக்கூடாது வழங்குவதாக இருந்தால் கல்முனை மாநகர சபை ஒரே நேரத்தில் தான்காக பிரிக்கப்படல் வேண்டும் என்கின்ற ஒரு கூற்றை கல்முனைக்குடி சமூகத்தினர்கள் முன்வைத்து, பிரகடனப்படுத்த இருந்த சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றத்தை தடுத்து நிறுத்தியதைத்தான் இன்று மேற்கட்டிக்காட்டிய இரு முழு மந்திரிகளும் ஒரு அரை மந்திரியும் சரி காண்கின்றனர். இது ஒரு தலைப்பட்சமான சரிகாணுதல் என்பதை அவர்களின் அரியல் அறிவு, அரியல் அனுபவம், குறித்த விடயதான விளக்கம் என்பனவற்றை கேள்விக்குட்படுத்துமேயன்றி மாறாக அவர்களின் முடிவு சரி என்று ஆகாது.

கல்முனை மாநகர சபையை தான்காக பிரிப்பதென்பது அன்று (2017இல்) சடுதியாக முன்வைக்கப்பட்ட கல்முனைக்குடி தரப்பினர்களின் முன்னெடுப்பாகும். இதற்கு முன்னர் கடந்த 2009 தற்காக கையாண்ட முறைகேடான முறைமை என்பது மிகத்தெளிவான ஒன்றாகும்.

எது எப்படியிருந்தாலும் கல்முனை மாநகர சபை தான்காக பிரிக்கப்படுதல் என்பது இரண்டு பிரதேச செயலகங்களை முன்னிறுத்தியதாகும். அதில், சாய்ந்தமருது பிரதேச செயலகமும் அதன் எல்லைகளும் மிகத் தெளிவாக வரையறுக்கப்பட்டு இன்று காணப்படுகின்றது. அதேநேரம் கல்முனை பிரதேச செயலகத்தின் எல்லைக்குள்தான் அவர்கள் கூறுகின்ற ஏனைய மூன்று பிரிப்புக்களும் உள்ளடங்கும்.

தான்காக பிரிக்கப்படுவதில் கல்முனைக்குடி தரப்பினர்களுக்கு உண்மைக்கு உண்மையான விருப்பம் இருப்பின் சாய்ந்தமருது முதலில் பிரிந்து சென்றதினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் எவை என்பதை குறிப்பிட்டு கட்டிக்காட்டியிருத்தல் வேண்டும். கல்முனை பிரதேச செயலகத்தை மையப்படுத்தி மூன்று சபைகளை உருவாக்குவதில் சாய்ந்தமருது எப்படி தொடர்புபடுகின்றதென்பதை ஆதாரப்படுத்தியிருக்க வேண்டும். இவை எதுவுமே நடைபெறாது ஒரே நேரத்தில் தான்காக பிரிய வேண்டும் என்று மட்டும் அடம்பிடிப்பதற்கு சாய்ந்தமருது என்வாறு வலுப்படுத்தும் என்பதையாவது வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

இவ்வாறான நிலைப்பாடுகள் எதுவும் முன்னெடுக்கப்படாது சாய்ந்தமருதுக்கு மட்டும் தனித்து உள்ளூராட்சி மன்றம் உருவாக்கப்படுவது சாத்தியம் இல்லை என்று சொல்வதில் எந்த நியாயங்களும் இல்லாத ஒன்றையே மேற்குறித்த அமைச்சர்கள் ஏற்றிருப்பதானது நியாயத்திற்கு புறம்பானது மட்டுமன்றி விடயதானத்துக்கும் ஒவ்வாதவை என்பதைத்தான் சாய்ந்தமருது மக்கள் முன்வைக்க வேண்டிய திர்ப்பந்தம் ஏற்படுகின்றது. ஒவ்வொரு அரியல் கட்சியும் தங்களது கட்சி அரியலின் நலன் கருதி சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றக் கோரிக்கையில் தவறாக செயற்படுகின்றனர் என்பதை இவை எடுத்துக்காட்டுகின்றன.

சாய்ந்தமருது மக்கள் முஸ்லிம் தனிக் கட்சி என்ற அடிப்படையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்ட காலம் தொட்டு இறுதியாக நடைபெற்ற 2015 பொதுத்தேர்தல் வரை அக்கட்சியே தமது கட்சியாக ஏற்றுகொண்டு அதற்காகவே பெரும்பாலான வாக்குகளையும் அளித்து வந்திருக்கின்ற மக்கள் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. அதிலும் சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றக் கோரிக்கையை பொறுத்து இம்மாநிலத்தின் பல அமைப்புக்களும் குறிப்பாக ஜும்ஆ பள்ளிவாசல் உட்பட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை பலமாக நம்பி அக்கட்சியிடம் இம்மக்களின் வேண்டுகோளை முன்வைத்து, தீர்வுத்தர வேண்டுமென்று தீண்டகாலமாக அவர்களோடு பயணித்திருந்தனர்.

சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றக் கோரிக்கை விவகாரத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பல்வேறு முகங்களை இம்மக்களுக்கு காட்டியிருக்கின்றது. அதன் உச்ச பட்சமாக எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெற இருக்கின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சாய்ந்தமருதில் போட்டி வேட்பாளர்களை களமிறக்கியது மட்டுமன்றி அதன் தலைமைத்துவம் கல்முனை மாநகர சபையை தான்காக பிரிப்பதில் பல சிக்கல்கள் இருப்பதாகவும் அதனை மிகுந்த அவதானத்துடன் செயற்பட்டு செய்யவேண்டிய பொறுப்பு இருப்பதாகவும் இன்று கூறி வருகின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பிரச்சினைகள் இருப்பதாக குறிப்பிடுகின்ற விடயங்களில் மூன்று அம்சங்கள் காணப்படுகின்றன. (01) கல்முனை அரசியலில் முஸ்லிம் காங்கிரஸின் அதிகாரம் இழக்கப்படுவது. (02) கல்முனை வாழ் தமிழ் மக்களுக்காக ஓர் உள்ளூராட்சி மன்றத்தை உருவாக்குவது. (03) நற்பிட்டிமுனை மக்கள் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதாகும்.

அமைச்சர் ரஹூப் ஹக்கீமின் முதலாவது ஐயம் அவரது கட்சி தலைமை சார்ந்ததேயன்றி முஸ்லிம் மக்களுடைய பிரச்சினை அல்ல. ஏனெனில், சாய்ந்தமருது தீங்கலான கல்முனை மாநகர சபை எல்லையிலும் முஸ்லிம் மக்கள் வாழக்கூடிய வட்டாரங்களின் அடிப்படையிலும் கட்சிகள் பெறுகின்ற மொத்த முஸ்லிம் வாக்குகளின் அடிப்படையிலும் முஸ்லிம்கள் தமிழர்களை விடவும் அதிகரித்த ஆசனங்களை பெற்று முஸ்லிம் அரசியல் அதிகாரத்தை கல்முனையில் நிலைநிறுத்த முடியும். இவற்றினை இங்கு வகுக்கப்பட்டிருக்கின்ற வட்டாரங்களின் எண்ணிக்கையும் இங்கு இருப்புக்கொண்டுள்ள வாக்காளர் தொகையும் திருப்திகரமானதாகும். அமைச்சர் ஹக்கீமின் இரண்டாவது ஐயப்பாடான கல்முனை வாழ் தமிழ் மக்களுக்கான ஒரு சபையை உருவாக்குவது என்பது அம்மக்கள் இன்று முன்வைக்காத ஒரு விடயத்திலுள் வலிந்து தாமாகவே சென்று உருவாக்கிகொண்ட பிரச்சினையேயன்றி கலமாக எழுந்த ஒன்றல்ல.

அதிலும், இந்த தமிழ் சபை உருவாக்கத்திற்கும், சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றத்தை வழங்குவதில் தாமதத்தை ஏற்படுத்துவதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. ஏனெனில், கல்முனை வாழ் தமிழ் மக்களுக்கான சபை என்பது கல்முனை பிரதேச செயலகத்தை மையப்படுத்தி நிர்வுகாணப்பட வேண்டிய ஒரு பிரச்சினையாகும்.

அமைச்சர் ரஹூப் ஹக்கீமின் நற்பிட்டிமுனை மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்ற ஐயப்பாடானது வெளிப்படையில் நியாயம் போன்று தோன்றினாலும், அடிப்படையில் அவ்வாறு பாதிப்பாகாது. ஏனெனில், புதிய சபைகள் தோற்றுவிக்கப்படுகின்றபோது இவ்வாறு சில பகுதிகள் அங்குமிங்குமாக மாறி அமைவது தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கும்.

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழர்களை பெரும்பான்மையாக கொண்ட நாவிதன்வெளி பிரதேச சபையில் மத்திய முகாம், சவளக்கடை பிரதேசங்களில் வாழ்கின்ற முஸ்லிம்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதும், முஸ்லிம்களைப் பெரும்பான்மையாக கொண்ட இறக்காமம் பிரதேச சபையில் மாணிக்கமடு சார்ந்த தமிழர்கள் உள்வாங்கப்பட்டிருப்பதும் இதற்குச் சில உதாரணமாகும். அது வேறான ஒரு நாடாகவோ, அரசாங்கமாகவோ இருப்பதுபோல் சித்தரிக்காது, இலங்கை என்ற ஒரு நாட்டில் அந்நாட்டின் அரசாங்கத்துக்கு கீழ் இயங்குகின்ற ஒரு விடயம் என்றுதான் இது பார்க்கப்படல் வேண்டும்.

இவ்வாறு அச்சப்பட வேண்டிய தேவை என்பது கூட கல்முனை மாநகர சபைகள் தான்காக பிரிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை எந்தரப்பினர்கள் முன்வைக்கின்றனரோ அதற்கு யார்யாரெல்லாம் ஆதரவு வழங்குகின்றனரோ அவர்களால் உருவாக்கப்படுகின்றதேயன்றி சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றக்கோரிக்கை இவற்றினை தோற்றுவிக்கவில்லை என்பது மிக வெளிப்படையான ஒன்றாகும்.

ஆகவே, சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றக் கோரிக்கையை நகக்குவதற்கும், இல்லாமல் செய்வதற்கும் வேண்டுமென்று முன்வைக்கப்படுகின்ற போலியான காரணங்களையும், பிழைவான தரவுகளையும் வைத்து இம்மக்களை வதை செய்வதாகவே பார்க்க வைக்கின்றது. ஆக மொத்தத்தில் கல்முனை அரசியலில் தொடர்புடையதாக இருக்கின்ற முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களான ரஹூப் ஹக்கீம், றிஷாத் பதியுதீன், அதாவுல்லாஹ் ஆகியோர்கள் சாய்ந்தமருது மக்களின் நியாயமான கோரிக்கைக்கு எதிரானவர்களாகவும், துரோகமிழைத்தவர்களாகவுமே வரலாறு எதிர்காலத்தில் பதிவு செய்யும் என்பதில் ஐயமில்லை.

எனது இரண்டரை வருட பயணத்தில் ஏமாற்றப்பட்ட மக்களுக்கு சிறந்த பலன்

பிரதித் தலைவர் செய்னுலாப்தின் நஸீர் அஹமட்

(ஏறாவூர் -ஏ.எச்.ஏ. ஹாசைன்)

ஏறாவூர் பிரதேசத்தின் 30 வருட கால ஏமாற்று அரசியலுக்கு மாற்றீடான எனது அரசியல் பிரவேசம் ஏமாற்றப்பட்ட மக்களுக்கு இரண்டரை வருட காலத்தில் சிறந்த பலனைத் தந்துள்ளது என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவருமான செய்னுலாப்தின் நஸீர் அஹமட் தெரிவித்தார்

ஏறாவூர் நகரில் நேற்று இடம்பெற்ற ஏறாவூர் நகரசபையைக் கைப்பற்றும் விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாகப் போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து அவர் உரையாற்றினார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சோரம்போய் விட்டதாக கொக்கரித்துத் திரிகின்றனர்.

ஆனால், உண்மை அதுவல்ல, நடைபெறப் போகும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சுமார் 70 சதவீதத்திற்கு மேலான உள்ளூராட்சி மன்றங்களை ஐக்கிய தேசியக் கட்சியே கைப்பற்றும் என்பதோடு அதற்கடுத்து வரப்போகின்ற மாகாண சபைத் தேர்தலிலும் அதன் பின்னரான பொதுத் தேர்தலிலும் அக்கட்சியே கோலோச்சப் போகின்றது. அப்போது நாம் அந்த ஆட்சியில் இருப்போம்.

ஸ்ரீ.ல.மு.கா வின் இதயமாக இருக்கின்ற பகுதிகளிலும் கூட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து போட்டியிடுகின்றது.ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஒரு போதும் அதன் வரலாறு நெடுகிலும் அதன் தனித்துவத்தை இழக்கவில்லை. சமகால தகர்வுகளின் போக்கை நாடி பிடித்தறிந்து சமயோசிதமான சிந்தனை மூலம் அது அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு பல அரசியல் வியூகங்களை வகுத்துச் செயற்பட்டு வந்திருக்கின்றது.

இத்தகைய ஓர் அரசியல் ஞானத்தோடு எமது ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் அஷ்ரப், அதன் சமூகப் போராளிகளை வழி நடாத்தி வந்திருக்கின்றார்கள் என்பதை அதன் கடந்த கால வரலாறு களிலிருந்து தெரிந்து கொள்ள முடியும்.அரசியல் ரீதியான வியூகங்களில் நாம் ஒருபோதும் தோற்றுப்போனதில்லை.அரசியல் வியூகம் அமைப்பதில் மறைந்த தலைவர் அஷ்ரப் வெற்றி கண்டிருக்கின்றார். அவரது ஆளுமை மிக்க தலைமைத்துவத்தில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த எதிர்க்கட்சி ஆனும் கட்சி எல்லோரது காலத்திலும் நாம் சரியான வியூகங்களை வகுத்து அரசியல் ஆட்சியதிகாரத்தில் பங்கெடுத்திருக்கின்றோம்.நாம் ஒவ்வொரு அரசியலுக்குமாக மக்களுக்கு என்ன தேவை என்பதை ஆய்வின் அடிப்படையில் திட்டமிட்டுச் செயற்படுத்தி வந்திருக்கின்றோம் என்றார்.

பெண் பொலிஸ் உத்தியோகத்தர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம் மீசாலை புத்தூர்ச் சந்தி ஏ 9 வீதியில் பெண் காவல்துறை உத்தியோகத்தர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றதாக கொடிகாம காவல்துறையினர் தெரிவித்தனர்.

பருத்தித்துறை காவல் நிலையத்தில் கடமையாற்றும் பெண் காவல்துறை உத்தியோகத்தரே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். காயமடைந்த பெண் காவல்துறை அதிகாரி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பணிக்கு சென்று வீடு திரும்பும் வழியில் அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த பெண் அதிகாரியின் கணவரால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அவர் காவல் துறைக்கு வாக்குமூலம் வழங்கியுள்ள நிலையில் இ சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் காவல்துறையினர் மேற்கொண்டுவருகின்றனர்.

மு.கா வின் மூத்தபோராளிகள் மக்கள் காங்கிரஸில் இணைவு!

மூதூர் பிரதேச சபைத் தேர்தலில், நெய்தல் நகர் வட்டாரத்தில் மக்கள் காங்கிரஸின் மயில் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்துமூதூரில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் மூத்த போராளிகள் சுமார் 20 பேர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர், அமைச்சர் றிஷாட் பதியுதீன் முன்னிலையில் மக்கள் காங்கிரஸில் இணைந்து கொண்டனர்.

இலங்கை முஸ்லிம் சமூகத்தின் ஒட்டுமொத்தக் குரலாக மக்கள் காங்கிரஸ் தலைவர், அமைச்சர் றிஷாட் பதியுதீன் திகழ்வதாலும், மூதூர் மக்களின் விடிவுக்காக எந்த விதமான நடவடிக்கைகளையும், இத்தனை வருட காலமும் முஸ்லிம் காங்கிரஸ் மேற்கொள்ளாத நிலையிலேயே, தாம் இந்த முடிவை எடுத்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மூதூரில்இடம்பெற்றதேர்தல் பிரசாரக் கூட்டத்தில், மக்கள் அலையலையாகத் திரண்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

உள்ளூராட்சிமன்றம் கிடைக்கும் வரை சாய்ந்தமருதுக்கு மேயர் பதவி

கல்முனை - சாய்ந்தமருது மாநகரசபை என பெயர் மாற்றம்

அமைச்சர் ரஷூப் ஹக்கீம்

சாய்ந்தமருதுக்கு தனியான உள்ளூராட்சி மன்றம் கிடைக்கும் வரை, கல்முனை மாநகர சபையின் மேயர் பதவி அந்த மண்ணுக்கே வழங்கப்படும் என்பதை சாய்ந்தமருது மண்ணில் வைத்து பிரகடனம் செய்கிறேன். அதுவரைக்கும் இந்த மாநகரை "கல்முனை - சாய்ந்தமருது மாநகரம்" என பெயரிடுவோம் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பல்லாயிரக்கணக்கான ஆதரவாளர் மத்தியில் சனியன்று சாய்ந்தமருது பௌஸி மைதானத்தில் நடைபெற்ற 'மாண்புறும் சாய்ந்தமருது' எழுச்சி மாநாட்டில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேலும் கூறியதாவது:

கடந்த தேர்தலில் எங்களுக்கு சாய்ந்தமருதில் வழங்கப்பட்ட வாக்குகள் இந்த முறையும் கிடைக்கும். இந்தமுறை மேயர் பதவியை தந்துதான் சாய்ந்தமருது மண்ணை கட்சி அலங்கரிக்கும். சாய்ந்தமருதுக்கு தனியான பிரதேச சபை வழங்கப்படும் வரை மேயர் பதவி தொடரும். அதை யாரா லும் தடுக்க முடியாது. கல்முனையிலுள்ள யாரும் அதை எதிர்த்து பேசமாட்டார்கள். அதுவரை இந்த மாநகரம் கல்முனை - சாய்ந்தமருது மாநகரம் என பெயர் மாற்றப்படும்.

இந்த மாநகரத்தை அபிவிருத்தி செய்வதற்காக இந்த வருடத்தில் 2000 மில்லியன் ரூபாவை செலவிடுவதற்கு நான் தயாராகிக்கொண்டிருக்கிறேன். அதில் 200 மில்லியன் ரூபாவை எடுத்து, சாய்ந்தமருது சாய்ந்தமருது பிரதேச செயலக கட்டடத்தை நூலக வளாகத்தில் அமைக்கவுள்ளேன். இந்த வேலைத்திட்டங்களை இந்த வருடமே நாங்கள் ஆரம்பிக்கவுள்ளோம்.

சாய்ந்தமருதுக்கு தனியான உள்ளூராட்சி மன்றம் வழங்குவதாக நான் வாக்குறுதி வழங்கியிருக்கிறேன். அந்த வாக்குறுதியை என்றைக்கும் நான் மறந்து செயற்பட்டதில்லை. இடைநடுவில் நெருக்கடிகள் ஏற்பட்டபோது, சாய்ந்தமருது சாரியில் பள்ளிவாசல் திரிவாகம் எங்களுடன் கதைத்தது. சாய்ந்தமருதிலுள்ள கட்சி முக்கியஸ்தர்கள் என்னிடம் வந்து பாரிய அழுத்தம் கொடுத்துக்கொண்டிருந்தனர். சாய்ந்தமருதுக்கு நான் கொடுத்த வாக்குறுதியில் ஒரு துளியேனும் நான் மாறவில்லை என்பதை சொல்லியாக வேண்டும். எந்த பிரதேசத்துக்கும் பாதிப்பில்லாத வகையில் தீர்வைக் கொடுக்கும் வரை சாய்ந்தமருது மக்கள் பொறுத்திருக்க வேண்டும்.

மர்ஹூம் அஷ்ரஃபின் மரணத்தின்பின் இணைத் தலைமையில் முஸ்லிம் காங்கிரஸ் இருந்தது. சாய்ந்தமருதுக்கு பிரதேச செயலகம் வழங்கப்பட்டதை கொண்டாடும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரமாண்ட கூட்டத்துக்கு என்னை அழைத்துவந்து கட்சியின் ஏக தலைவராக என்னை பிரகடனப்படுத்தியது இந்த மண். முன்னாள் அமைப்பாளர் புர்கான் என்னை அழைத்துவந்து, தலைமை என்ற மகுடத்தை எனக்கு சூட்டினார்கள். சாய்ந்தமருது மண் இந்தக் கட்சியை பாதுகாத்த மண். சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்ற விடயத்தில் தவறு எங்கு நடந்திருக்கிறது என்பதை முதலில் பார்க்கவேண்டும். தவறு முஸ்லிம் காங்கிரஸ் தலைமையிலா, அல்லது பள்ளி தலைமையிலா, அல்லது ஏனைய அமைச்சர்கள் பொறுப்பாளிகளா, அல்லது எமது பிரதியமைச்சர் பொறுப்பாளரா என்று இந்தப் பிரச்சினையை வெவ்வேறு கோணங்களில் பார்க்கலாம். ஆனால், ஒவ்வொரு கோணத்திலிருந்தும் இந்தப் பிரச்சினையைப் பார்ப்பவர்கள் தங்களது சொந்த அரசியலை வைத்து இதற்கு வியாக்கியானம் கூறுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

கல்முனையைச் சேர்ந்த முன்னாள் மாகாணசபை உறுப்பினர் கிழக்கு மாகாண சபையில் பிரேரணையை கொண்டுவந்து உரையாற்றும்போது, எந்தக் காரணம்கொண்டும் சாய்ந்தமருதுக்கு தனியான உள்ளூராட்சி மன்றம் வழங்க விடமாட்டேன். அவ்வாறு வழங்கினால் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வேன் என்று கட்சித் தலைமை கொடுத்த வாக்குறுதியையும் மீறிப் பேசினார். இப்போது அவர் மயில் கட்சியிடம் போய் சரணடைந்திருக்கிறார்.

உள்ளூராட்சி மன்ற விவாதத்தில் கட்சியை அழிப்பதற்கான சதி அரங்கேறிக் கொண்டிருக்கிறது. ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல சாய்ந்தமருதிலும், கல்முனையிலும் இப்படியான பினாமிகள் இருந்துகொண்டிருக்கின்றனர். மர்ஹூம் அஷ்ரஃப் கல்முனையில் மாநகரில் அசைக்கமுடியாத இயக்கமாக முஸ்லிம் காங்கிரஸை நிலைநிறுத்திவிட்டிருக்கிறார். அப்படியான கட்சியை எந்த பினாமிகள் வந்தாலும் அழிக்கமுடியாது. அவரது காலத்தில் சவாலாக இருந்த மருதமுனை கூட இப்போது முஸ்லிம் காங்கிரஸ் வசமுள்ளது.

கலப்பு அரசியலுக்காக இந்த விடயம் பூதாகரமாக மாற்றப்பட்டுள்ளது. சாய்ந்தமருதுக்கு மேயர் பதவி வழங்கப்பட்ட விவகாரத்தில் பொறுப்புதாரி நான்தான். ஆனால், இந்தப் பொருத்தம் கொடுக்கவேண்டி ஏற்பட்டதற்கு மூலகாரணம் முன்னாள் மாகாணசபை உறுப்பினரான சாய்ந்தமருதைச் சேர்ந்த ஜெமீல். நிசாம் காரியப்பருக்கு ஆதரவாக நின்ற காரணத்துக்காக ஜெமீலின் நிறுவனம் உடைக்கப்பட்டது. இன்று ஜெமீல் நடத்துகின்ற கூத்தையே அன்று சிராஸ் மீராசாஹிப் செய்தார்.

இரு துருவங்களான சிராஸும், ஜெமீலும் என்று கட்சியை அழிப்பதற்காக வேலை செய்துகொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு அரசியல் அத்தல்லு கொடுத்த இதயத்தை அழிப்பதற்கு இன்று விலைபோயிருக்கிறார்கள். தங்களுக்கு பதவிகள் இல்லை என்றபோது இந்த பித்தலாட்டங்கள் ஆரம்பித்துவிட்டன. ஏட்டிக்குப் போட்டியாக அரசியல் பதவிகளை வகித்துவந்த சாய்ந்தமருதும் கல்முனையும் கட்சியின் கோட்டைகள்.

சாய்ந்தமருதுக்கு பிரதேச செயலகம் தருவோம், பிரதேச சபை தரமாட்டோம் என்று மறைந்த தலைவர் அஷ்ரஃப் சொல்லியிருந்தார். கல்முனை மாநகரை ஒன்றாக வைத்திருக்கவேண்டும் என்ற நோக்கத்தில் அவர் அப்படிச் சொன்னார். அவரது பேச்சையும் மீறி நாங்கள் சாய்ந்தமருதுக்கு உள்ளூராட்சி மன்றம் வழங்குவதாக வாக்குறுதி கொடுத்துவிட்டோம். நாங்கள் கொடுத்த வாக்குறுதியை மாற்றமுடியாது. கட்சித் தலைமை கொடுத்த இந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவேண்டும்.

புதிய தேர்தல் முறையினால் கல்முனை மாநகருக்கு ஆபத்து என்பதை காரணம் காட்டி இரண்டாக பிரிப்பதை கல்முனை மக்கள் எதிர்த்தனர். சாய்ந்தமருதுக்கு உள்ளூராட்சி மன்றம் இப்போதைக்கு வேண்டாம். ஆனால், தேர்தலுக்கு முன்னர் அறிவியுங்கள். அடுத்த தேர்தலில் கல்முனை மக்களின் கூறுவது சரியா, பிழையா என்று பார்ப்போம் என்று சாய்ந்தமருது பள்ளிவாசல் திரிவாகம் சொன்னது. இந்த தேர்தலில் வாக்களித்து எங்களது ஆசனங்கள் ஆட்டியமைக்க போதுமானது என்பதை நிரூபிப்போம் என்று கூறினார்கள்.

ஆனால், அதற்கிடையில் அமைச்சர் பைசர் முஸ்தபா இந்த விடயத்தை வேண்டுமென்றே குழப்பியடித்துவிட்டார். இதனால்தான் கல்முனையை நான்காக பிரிக்கின்ற பெரிய விபரீதம் ஏற்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கதைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்த விடயத்தில் என்ன நடக்கப்போகும் என்பது எனக்கு ஏற்கனவே தெரியும். விடயத்தை சிக்கலாக்கி என்னை நெருக்கடிக்கள் மாட்டப் போகிறார்கள் என்பதை உணர்ந்துகொண்டேன்.

சாய்ந்தமருது பள்ளிவாசல் இந்த விடயத்தில் கொஞ்சம் நிதானமாக நடந்திருக்கவேண்டும். தனியான உள்ளூராட்சி மன்றத்தை தலைவர் பெற்றுத்தருவதாக சொல்கிறார். அவரது பேச்சை நம்பி, கல்முனைக்கு பாதிப்பு வராது என்பதை தேர்தல் மூலம் நிரூபித்துக் காட்டியிருக்க வேண்டும். ஒட்டுமொத்தமாக எங்களுக்கு வாக்களித்து, புதிய தேர்தல் முறையில் பாதிப்பு வராது என்பதை ஆசன விகிதாசாரத்தில் நிரூபித்துக்காட்ட பொறுமையோடு இருந்திருக்கலாம்என்றார்.

சாய்ந்தமருதுக்கான முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல்குழு தலைவர் புர்கான் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் பிரதி அமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ், கட்சி செயலாளர் நிசாம் காரியப்பர், தவிசாளர் முழக்கம் அப்துல் மஜீத், புதிய பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். நசீர், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ஆரிப் சம்சுதீன், சாய்ந்தமருது வேட்பாளர்களான எம்.ஐ.எம். பிர்தௌஸ், ஏ.ஏ. பசீர், ஏ.சி. வஹிதாகான், ஏ.ஏ. நசார்டீன், எம்.எம். பாமி, ஏ.எம். முபாறக் மற்றும் கட்சிய முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

வாழவைத்த புத்தளம் மண்ணை நாங்கள் ஒருபோதும் ஆள வரவில்லை

புத்தளத்தில் றிஷாத்

(கஜப் எம்.காசிம்)

அகதிகளாகவுடோடி வந்து தஞ்சமடைந்த வடக்கு முஸ்லிம்களை வாழவைத்த புத்தளம் மண்ணையும், அந்த மக்களையும் நாங்கள் ஒருபோதும் ஆள வரவில்லை என்றும், இந்த பிரதேசத்தை வளங்கொழிக்கும்பூமியாக மாற்ற அத்தனை நடவடிக்கைகளையும், உதவிகளையும் மேற்கொள்வோம் என்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர், அமைச்சர் றிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

புத்தளம் நகரசபைக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில், ஐக்கிய தேசிய முன்னணியில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, கடந்த வெள்ளியன்று புத்தளம், வெட்டுக்குளச் சந்தியில் இடம் பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

என்மீது கொண்ட அரசியல் காழ்ப்புணர்வு காரணமாகவே, நான் சார்ந்த அகதிச் சமூகத்தை "வந்தான் வரத்தான், பிச்சைக்காரர்கள், சொப்பிங் பேக்குடன் வந்தவர்கள்" எனவும் தாராளமில்லாமல், புத்தளத்து அரசியல்வாதிகள் ஒருசிலர் வாக்குகளுக்காகத் தேர்தல் மேடைகளில் கூறி வருகின்றனர்.

புலிகளால் விரட்டப்பட்டு, உடுத்த உடையோடு புத்தளத்துக்கு வந்து, கால் நூற்றாண்டுக்கு மேலாக இந்த மண்ணிலே உங்களோடு ஐக்கியமாகவும், ஒற்றுமையாகவும் வாழும் எம்மை, இவ்வாறான அரசியல்வாதிகள் கேவலமாக விமர்சிக்கின்றனர். இழந்துபோன தங்களது அதிகாரத்தை மீண்டும் எப்படியாவது பெற்றுக்கொள்ள வேண்டுமென்று, இவர்கள் குத்துக்கரணம் போடுகின்றனர். எனினும், எமது சகோதரர்களான புத்தளத்து மக்கள் அன்பானவர்கள், பண்பானவர்கள், எதற்கும் விலை போகாதவர்கள், எத்தனையோ தியாகங்களுக்கு மத்தியில் எம்முடன் இன்னுமே ஒட்டி உறவாடியே வருகின்றனர். இந்த நிலையில், அந்த மக்களின் மனங்களிலே நஞ்சு விதைகளை இந்த அரசியல்வாதிகள் விதைத்து வருகின்றனர்.

புத்தளம் மண்ணையும், மக்களையும் வடக்கு முஸ்லிம்கள் ஒருபோதுமே மறக்கவில்லை, மறக்கவும்மாட்டார்கள். அதுமட்டுமின்றி இரண்டு சாராரும் இரண்டறக் கலந்து, ஒட்டி உறவாடி வாழ்கின்ற இந்த அன்புப் பிணைப்பைஉடைத்தெறிவதன் மூலமே, தமக்கு அரசியல் எதிர்காலம் இருக்கும் என்று ஒருசில மரக்கட்சி அரசியல்வாதிகள் அலைந்து திரிகின்றனர்.

இந்த மண்ணை ஆள வேண்டும் என்ற நோக்கம் வடக்கு முஸ்லிம்களுக்கும் இல்லை, அவர்களின் பிரதிநிதியான எனக்கும் இல்லை. என் உயிருள்ள வரை இந்த மாவட்டத்தில் எந்தத் தேர்தலிலும் நான் போட்டியிடப் போவதுமில்லை. அதற்கானதேவையும்இல்லை. அவ்வாறான ஆசையும் எனக்குக் கிடையாது. எனவே, எவரும் வீணாக அச்சம்கொள்ள வேண்டாம்.என்றார்.

மக்கள் காங்கிரஸின் முக்கியஸ்தர் இல்ஹாம் மரைக்கார் தலைமையில் இடம் பெற்ற இந்தக் கூட்டத்தில், மக்கள் காங்கிரஸின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நவவி, புத்தளம் மாவட்ட அமைப்பாளர் அலி சப்ரி, முன்னாள் நகரசபை உறுப்பினர் முஹ்லி மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஆப்தீன் எஹியா உட்பட பெருந்திரளான மக்களும் பங்கேற்றிருந்தனர்.

பதுளை வை.எம்.எம்.ஏ. கிளையின் சுதந்திர தின நிகழ்வுகள்

(வாஹிட் குத்தூஸ், எம்.டி.எம். பாயில்)

பதுளை வை.எம்.எம்.ஏ. கிளையினர் சிறப்புற ஏற்பாடு செய்திருந்த70வது இன மதங்களுக்கிடையிலானநல்லிணக்க,சகவாழ்வுக்கான சுதந்திர தின விழா நேற்று கிளைகளாக முன்றலில் கிளைத் தலைவர் இஹ்ஸான் ஹமீட் தலைமையில் நடைபெற்றது.

பதுளை நீதிபதி மலை (ஜட்ஜஸ் ஹில்) நூர் பள்ளிவாசல் இமாம் இக்பால் மௌலவியின் கிராஅத்தோடும், கிளைத் தலைவர் இஹ்சான் ஹமீட்டின் வரவேற்புரையோடும் ஆரம்பமான இந்நிகழ்வில் பிரதம அதிதியாககலந்துசிறப்பித்தது னைபொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உபுலதென்னகோன் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

இவ் விசேடவிழாவில் பதுளை ஸ்ரீ ரஜமஹாவிஹாரைவிஹாராதிபதிகும்பல் கவுமேசரண பால,பதுளை ஸ்ரீ கதிரேசன் கோயில் பிரதமகுருக்கள் வாழ் சிவஸ்ரீ பாலபிரதிப் குருக்கள்,பதுளைஅன்னாவர் பெரிய ஜும்ஆபள்ளிவாசல் பிரதம இமாம் முஹம்மத் இமாம் இஸ்மாயில் மௌலவி,பதுளைகத்தோலிக்க உள்கொட் பிதாரவிபெரேரா,பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிஉபுல் தென்னகோன் ஆகியோரும் சமயநிகழ்வுகளுடன் உரைகளையும் நிகழ்த்தினர்.

நிகழ்வில் பதுளைப்பிட்டியகிராமசேவகர் உதயகுமார,கிளைச் செயலாளர் பாயில் ஆசிரியர்,பொருளாளர்,நாஸிம் ஆசிரியர் மற்றும் பதுளைக்கிளை வை.எம்.எம்.ஏ சபைசெயலாளர்,முஸ்ரீ அஸீஸ் லாபிர் மௌலவிஉலமாக்கள்,சிரேஷ்ட உறுப்பினர்களான தாஹிர், இக்பால், அஸார் மற்றும் உறுப்பினர்கள்,சமயசமூகவர்த்தகப் பிரமுகர்கள்,பதுளை வை.எம்.எம்.ஏ. பாலர் பாடசாலைஆசிரியர்கள்,பெற்றோர்கள்,மாணவர்கள் கலந்துகொண்டனர். நிகழ்வில் முன்னாள் செயலாளர் பொதுக்காதாரப் பரிசோதகர் சியாம் மன் நன்றியுரை நவின்றார்.

வட கிழக்கு பகுதிக்கு தமிழ் தெரிந்த தேர்தல் அலுவலர்கள்

(ஏ.ஏ.எம். பாயில்)

இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு தமிழ் தெரிந்த தேர்தல் அலுவலர்கள் தெரிவு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.தமிழ் மொழியில் கருமமாற்றக்கூடிய இவர்கள் வட கிழக்கு உட்பட சிறுபான்மை மக்கள் கணிசமாக வாழும் பிரதேசங்களில் தேர்தல் கடமைகளுக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.குறிப்பாக வட கிழக்கு மாகாணங்களுக்கு தேர்தல் கடமைகளுக்காக கடந்த பல வருடங்களாக மேற்படி தமிழ் தெரிந்த அலுவலர்கள் தேர்தல்களில் போது இப்பகுதியிலிருந்து அனுப்பப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். தேர்தல்கள் நிலைக்களத்தின் வேண்டுகோளுக்கமைய தேர்தல் கடமைகளுக்காக விண்ணப்பித்தவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அலுவலர்களை இப்பணிகளுக்காக அனுப்புவதற்கான பணிகளை இரத்தினபுரி மாவட்ட தேர்தல் காரியாலயம் மேற்கொண்டு வருகிறது.

முஸ்லிம் அரசியல் தலைவர்கள் நாட்டுக்காக எதையும் சாதிக்கவில்லை

ந.தே.மு. தவிசாளர் அப்துல் றஹுமான்

(ஏறாவூர் -ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

கடந்த கால் நூற்றாண்டு காலகட்டத்தில் பெயர் குறிப்பிடும் படியாக தேசத்திற்காக எதையாவது சாதித்துக் காட்டும்படியாக தேசிய முஸ்லிம் அரசியல் தலைவர்கள் திகழவில்லை என நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தவிசாளர் அப்துல் றஹுமான் தெரிவித்தார்.

காத்தான்குடியில் ஞாயிற்றுக்கிழமை நல்லாட்சிக்கான தேசிய முன்னணி ஏற்பாடு செய்திருந்த 70ஆவது சுதந்திர தின நிகழ்வில் அவர் உரையாற்றினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், வருடாவருடம் சுதந்திர தின நிகழ்வென்பது சம்பிரதாயபூர்மாகக் கொண்டாடப்படுகின்ற நிகழ்வாக அல்லாமல் உணர்வு பூர்வமாக அது இருக்க வேண்டும். சுதந்திர தினத்தில் எல்லோரும் பேசுகின்றதும் எல்லோரும் பேசாததுமான பல விடயங்கள் உள்ளன.

போராட்ட காலத்தில் நாட்டின் முன்னோடிகளான முஸ்லிம் தலைவர்கள் செய்த தியாகத்தை எல்லோரும் நெஞ்சை நிமிர்த்திப் பேசுவார்கள்.

ஆனால் பேசாத விடயம் கடந்த கால் நூற்றாண்டில் நமது அரசியல் தலைவர்கள் நாட்டுப்பற்றோடு எதனைச் செய்தார்கள் என்பதுதான். ஒரு முஸ்லிம் தலைவர், ஒரு முஸ்லிம் கட்சி நாட்டுக்கு எதுவும் செய்யவில்லை என்றால் நாம் இந்த நாட்டின் நலன்களிலிருந்து வேறு எங்கோ செல்கின்றோம் என்றுதான் அர்த்தம்.பல சுதந்திர தினங்களாகக் கொண்டாடப்பட வேண்டிய இன்னும் பல தினங்கள் உள்ளன.

பூர்வீகத்தையே இழந்திருக்கின்றோம். வாழ்வைத் தொலைத்து முகவரியற்றுப் போனோம். ஏன் இந்த இழப்புக்களுக்கு மரியாதை கிடைக்கவில்லை. சந்தர்ப்பவாத அரசியல்தான் இதற்குக் காரணம். முப்படையினரையும் நாம் பாராட்டுகின்றோம். அதேபோல தேசத்தின் பிரிவினைக்கு எதிராகக் குரல் கொடுத்த மக்களும் தியாகிகள்தான். அதனை இந்த நாடு உயிரோட்டமாகப் பாராட்டி தினை ஒட்ட வேண்டும் என்றார்.

இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று கெலிஓயா கலுகமுவையில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வுகளில் மாணவர்களின் ஊர்வலத்தையும் பிரதேச இஸ்லாமிய,பௌத்த மதகுருமார்கள் கலந்துகொண்டிருப்பதையும் படங்களில் காணலாம். (படம் : கம்பளை-எம்.எம்.எம். ரம்ஸீன்)

நீதி நேர்மையான பிரதிநிதிகளை தேர்தலில் தெரிவு செய்யுங்கள்

வேட்பாளர் நஸ்மி ஜெமில்

(பேருவளை நிருபர் முக்தார்)

ஊழல், இலஞ்சம், மோசடி, அரசியல் பழிவாங்கல் இல்லாமல் நீதியாகவும் நேர்மையாகவும் சேவை செய்யக்கூடிய பிரதிநிதிகளை இந்த உள்ளூராட்சித் தேர்தலில் பேருவளை மக்கள் தெரிவு செய்ய வேண்டும் மக்களுக்கு கிடைத்துள்ள இந்த நல்ல சந்தர்ப்பத்தின் மூலம் நல்லாட்சி செய்பவர்களையே பதவியில் அமர்த்த வேண்டும் என பேருவளை நகர சபைத் தேர்தலில் சிங்கள் கோட்டை வட்டாரத்தில் போட்டியிடும் நஸ்மி ஜமீல் கூறினார்.

சிங்கள் கோட்டை ஐ.தே.கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கட்சி ஆதரவாளர்கள் வர்த்தகர்கள் சமூக சேவையாளர்களுடனான சந்திப்பில் பேசும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் நஸ்மி மேலும் குறிப்பிடுகையில்,

நடைபெறவுள்ள தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி பேருவளை நகர சபையைக் கைப்பற்றுவது உறுதியாகும். இந்த வெற்றியை தடுக்க மஹிந்த ராஜபக்ஷ ஆதரவு அணியான கபேட்சைக்குழு முகநூல், வட்ஸ்அப், மூலமாக பொய்யான பிரசாரங்களை முன்னெடுத்துள்ளன. பேருவளை மக்களின் ஏகோபித்த முடிவு ஐ.தே.கவே நகரசபையை நிர்வகிக்க வேண்டும் என்பதாகும். இந்த முடிவை கபேட்சை குழுவினால் ஒரு போதும் மாற்ற முடியாது.

மக்கள் இந்த கயவர் அரசியல்வாதிகளை நிராகரித்துள்ள நிலையில் இன்று லிரி லிரியாக விடுவிடாகச்சென்று வாக்காளர்கள் மத்தியில் பொய் புரளிகளை கிளப்பி மக்களை திசைதிருப்ப முயல்கின்றனர்.

இந்த பொய்களை நம்ப மக்கள் தயாரில்லை. இவரின் ஒரே நோக்கம் மஹிந்தவுக்கு பேருவளை முஸ்லிம்களின் ஆதரவை பெற்றுக்கொடுப்பதேயாகும்.

முழு நாடுமே மஹிந்தவை எதிர்க்கும் போது அவருடைய பொதுஜன பெரமுனவை தோற்கடிக்க முயலும் போது பேருவளையில் உள்ள மஹிந்தவாதி முஸ்லிம்கள் ஒரு சிலர் கபேட்சை குழுவை மறைமுகமாக களமிறக்கி முஸ்லிம்களின் வாக்குகளை சூறையாடி பேருவளை முஸ்லிம்கள் மஹிந்தவுடனே என்பதைக்காட்ட முயல்கின்றனர்.

இந்த கயவர்வாதிகளின் வலையில் சமூக உணர்வுள்ள ஒரு முஸ்லிமும் சிக்க மாட்டான். பேருவளை நகர சபை பகுதியில் உள்ள 9 வட்டாரங்களை ஐ.தே.கவிடம் ஒப்படைக்க வாக்காளர்கள் முன்வந்துள்ளனர். நாம் கடைசி வரை ஒற்றுமையாக செயல்பட்டு எமது இலக்கை அடைந்து கொள்வோம் என்றார்.

சிறுபான்மையினரின் பலத்தை குட்டித்தேர்தலிலும் காட்ட வேண்டும்

எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.சம்பந்தன்

(பி.எம்.எம்.ஏ.காதர்,வ.டமன்டி, எம்.ஜெனில்)

அரசியல் தீர்வைப் பொறுத்தவரையில் தமிழ் மக்கள் மிகவும் உறுதியாக நிற்கின்றார்கள். அதை மேலும் பலப்படுத்தி ஊர்ஜிதப்படுத்தவதற்கு இந்தத் தேர்தலில் களமாகப் பயன்படுத்தி தமிழ் மக்கள் தங்கள் ஒற்றுமையை வெளிக் கொண்டு வரவேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும்,எதிர்க்கட்சித் தலைவருமான ஆர்.சம்பந்தன் வேண்டுகோள் விடுத்தார்.

கல்முனை மாநகர சபைத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து அண்மையில் கல்முனை சேனைக்குடியிருப்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நடைபெற இருக்கின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னணி மிக முக்கியமானதாகத் தென்படுகின்றது.தற்போழுது உத்தேசிக்கப்பட்டிருக்கின்ற புதிய அரசியல் சாசனத்தில் விதிக்கப்பட்டிருக்கின்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கு அங்கீகாரம்,பலம் அதிகரிக்கும்;

முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தப் பொதுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா,கோமல்வரன் உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்களும்,வேட்பாளர்களும் கலந்து கொண்டனர்.இங்கு ஆர்.சம்பந்தன் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,

தற்போதய சிந்தனையின் அடிப்படையில் இலங்கையின் வரலாற்றில் முதல் முறையாக உள்ளூராட்சி மன்றங்களுக்கான அதிகாரங்கள் அரசியல் சாசனத்தில் ஒரு பிரதானமான பட்டியலாகச் சேர்க்கப்பட இருக்கிறது.அது மாத்திரமல்ல அரசியல்; அதிகாரங்கள் சேர்க்கப்பட்டது மட்டமல்லாமல் மத்திய அரசாங்கமோ,மாகாண அரசாங்கமோ தங்களுடைய சட்டத்தை ஆக்கும் அதிகாரங்களின் அடிப்படையில் பல் வேறு சட்டங்களை உருவாக்குகின்ற பொழுது அதிகமான சட்டங்களை அமுல் படுத்துகின்ற அதிகாரம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அமைத்துக் கொடுக்கப்படும் என்று ஆலோசனை முன்வைக்கப்பட்டு தற்போது அது ஆலோசிக்கப்பட்டு வருகின்றது..அவ்விதமான முடிவொன்று வருமாக இருந்தால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மத்தியிலால், மாகாணத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரங்கள் சம்பந்தமாக பல விடயங்கள் கொடுக்கப்படலாம்..அந்தத் தேர்தலைத் தான் நீங்கள் எதிர்நோக்கியிருக்கின்றீர்கள்.ஆனால் நான் முன்பு கூறியது போல இன்று மக்களின் மனங்களில் எழுந்திருக்கின்ற முக்கியமான சில கேள்விகளுக்கு நான் பதிலளிப்பது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன். என்றார்.

கம்பஹாவில் துப்பாக்கி பிரயோகத்தில் காயமடைந்தவர் உயிரிழப்பு

கம்பஹா - அரசரச் சந்தியில் மேற்கொள்ளப் பட்ட துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த நபர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த குறித்த நபர் கம்பஹா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், பின்னர் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

31 வயதுடைய கம்பஹா - தெதகுவ பிரதேசத்தை சேர்ந்த நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உந்துருளியில் வந்த இருவர் குறித்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு தப்பிச் சென்றுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ள நிலையில், அவர்களை தேடி தற்போதைய நிலையில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக கம்பஹா காவற்துறை தெரிவித்துள்ளது.

வாக்குப் பலம்தான் ஒரு சமூகத்தின் மூலநாடி

திருமலை பிரசாரக்கூட்டங்களில் அமைச்சர் றிஷாத்

முஸ்லிம் சமூகம் ஏனைய சமூகங்களுடன் கட்டாகவும், பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களிலே தனித்துவமாகவும் போட்டியிட்டு, சமூகத்தை மீட்டெடுக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர், அமைச்சர் றிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை நகரசபை, கின்னியா நகரசபை, குச்சவெளி பிரதேச சபை, மூதூர் பிரதேச சபை, சேருவில பிரதேச சபை ஆகியவற்றில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, சனியன்று இடம்பெற்ற பல்வேறு கூட்டங்களில் அமைச்சர் உரையாற்றினார்.

இந்த நிகழ்வுகளில் உரையாற்றிய அமைச்சர் கூறியதாவது,

நாங்கள் கட்சி அரசியல் நடத்துவது தலைமைத்துவத்தையோ, கதிரைகளையோ பாதுகாக்கும் நோக்கத்தில் அல்ல. முஸ்லிம் சமூகம் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளைத்தீர்த்துக்கொள்வதற்காகவும், சமூகம்எதிர்கொண்டுள்ள ஆபத்துக்களைத் தடுத்து,நன்மைகளைப்பெற்றுக் கொடுப்பதற்காகவுமே நாம் அரசியல் நடத்துகின்றோம். சமூகத்தின் விடிவும், விமோசனமுமே பிரதானமானது. பொதுநலத்தை முன்னிறுத்தி நேர்மையாகவும், நிதானமாகவும் இந்தப் பயணத்தில் ஈடுபட்டு வருகின்றோம்.

கடந்த காலங்களில் தேசியக் கட்சிகளுக்கும், தனித்துவக் கட்சிகளுக்கும் நீங்கள் வாக்களித்து கண்ட பயன்கள் என்னவென்று ஆழமாகச் சிந்தித்துப் பாருங்கள். உங்களின் வாக்குகளைப் பெற்று அதிகாரத்துக்கு வந்தவர்கள், அமைச்சர்களாகவும், முதலமைச்சர்களாகவும், மாகாண அமைச்சர்களாகவும் பவனி வந்தார்களேயொழிய, உங்களை நாடி வந்து உருப்படியாக ஏதாவது செய்துள்ளார்களா?

நீங்கள் பல தசாப்தங்களுக்கு முன்னர் எதிர்நோக்கிய அதே பிரச்சினைகளையே, இன்னும் எதிர்கொள்கின்றீர்கள். இந்த நிலையிலிருந்து உங்களைக் காப்பாற்றும் நோக்கிலும், உங்களுக்கு உதவி செய்யும் நோக்கிலுமே நாம் இங்கு வந்துள்ளோம். உங்கள் வாக்குகளைப் பெற்று அமைச்சராக வேண்டும் என்றோ, அல்லது இருக்கும் அதிகாரத்தை இன்னும் கூட்டிக் கொள்வதற்காகவோ நாம் உங்களை நாடி வரவில்லை.

உள்ளூராட்சித் தேர்தலில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வட்டாரத்தேர்தலில், நீங்கள் வாக்களிக்கப் போகின்றீர்கள். உங்கள் வட்டாரத்தில் உங்களோடு வாழும், இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பொருத்தமானவர்களை நாம் தேர்தலில் இறக்கியுள்ளோம். அவர்களை பிரதிநிதிகளாகத் தெரிவு செய்து, எங்களின் உதவியுடன் நீங்கள் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். கிழக்கு மாகாணத்தில், பொத்துவில் தொடக்கம் புல்மோட்டை வரையிலான சிறுபான்மைமக்கள் வாழும் இடங்களில் கெடுபிடிகள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. ''வயற்காணிகளும், மேய்ச்சல் தரைகளும் வனவளம்'' என்ற பெயரிலும், '' வன பரிபாலனம்'' என்ற பெயரிலும் அடாத்தாகப் பிடிக்கப்பட்டு கையகப்படுத்தப்பட்டுள்ளன. வாழ்வாதாரங்கள் இல்லாததால் மக்கள்வறுமையையும், துன்பத்தையும் அனுபவிக்கின்றனர். இருப்பதற்கு வீடில்லை. போதிய நீர்வசதி இல்லை. மின்சாரம் இல்லை. அநேகமான கிராமப்புறங்களில் உள்ள பாதைகள் குன்றுங்குழியுமாக, காடுமுடாக மண்பாதைகளாகவே காணப்படுகின்றன.

வாக்குப்பலம் தான் ஒரு சமூகத்தின் மூல நாடியாகும். அதனை நீங்கள் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். சுமார் 70 வருடகாலங்கள் பெருந்தேசியக் கட்சிகளுக்கும், சுமார் 30 வருடகாலங்கள்தனித்துவக் கட்சிகளுக்கும் மாறிமாறி வாக்களித்த நீங்கள், இனிமேலாவது உண்மையை உணர்ந்து,எமக்கு ஒரு சந்தர்ப்பத்தைப் பெற்றுத் தாருங்கள் என்று அமைச்சர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்திற்கான பிரதான சுதந்திரதின நிகழ்வு யாழ் மாவட்ட செயலகத்தில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தாக்கலிங்கம் வேதநாயகன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுனர் ரெஜினோல்ட் கூரே பிரதம அதிதியாக கலந்துகொண்டு தேசியக்கொடியினை ஏற்றி வைத்தார்.

(படங்கள் விதுஷன்)

ACMC மகளிர் அணி நீர்கொழும்புக்கிளை நடத்தும் மாற்றுத் திறனாளிகளுக்கான நிகழ்வு

(எஸ்.எஸ்.எம்.ஸாகிர்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மகளிர் அணி நீர்கொழும்புக் கிளை நடத்தும் மாற்றுத் திறனாளிகளை இனங்கண்டு கொள்ளும் A DAY OF SPARKLE 'பிரகாசிக்கும் ஒரு தான்" என்ற மகுடத்திலமைந்த நிகழ்வு இன்று திங்கட்கிழமை (5) பிற்பகல் 3 மணிக்கு நீர் கொழும்பு ஷாக்கிர் வரவேற்பு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நீர் கொழும்பு முஹம்மட் வஸீர் சபீரின் பூரண அனுசரணையில் நீர் கொழும்பு மகளிர் அணி தலைவி பாத்திமா சிஹாராவின் தலைமையில், செயலாளர் எழுத்தாளர் வஸீலா சாஹிர் மற்றும் உறுப்பினர் ஆகியோரின் ஏற்பாட்டிலும் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரபல எழுத்தாளரும் ஊடகவியலாளருமான சிவலிங்கம் சதீஸ்குமார் நிகழ்வில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு கல்முனை முகைதீன் ஜும்மா பள்ளிவாசலில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகள் (4) பள்ளிவாசல் வளாகத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வானது கல்முனை முகைதீன் ஜும்மா பள்ளிவாசல் தலைவர் எஸ்.எம்.ஏ .அஸீஸ் தலைமையில் இடம்பெற்றதுடன் இவ் நிகழ்வில் பிரதம அதிதியாக விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எச்.எம் .எம் ஹரீஸ் கௌரவ அதிதியாக கல்முனை பிரதேச செயலாளர் எம்.எச்.முஹம்மத் கனி மற்றும் இந் நிகழ்வில் பள்ளி வாசல் நிர்வாகத்தினர் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். அத்துடன் நாட்டின் கபீட்சம் வேண்டி டி..ஆர். நௌபர் மௌலவியினால் விசேட துஆ பிரார்த்தனை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(எஸ்.எம்.எம்.றஸ்ரன்)

பாணந்துறை, தேவமுல்லை பஸார் வர்தகர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட சுதந்திர தின வைபவம் நேற்று பாணந்துறை வடக்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட இன்ஸ்பெக்டர் பி. டப்ளியு. ஆர்.பிரபாத் பரணவிதான தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இதில்மௌலவி டி.எல்.எம். பௌஸ் உரையாற்றுவதையும் பாணந்துறை கந்தசாமி கோவில் பிரம்ம ஸ்ரீ லக்ஷ்மிகாந்த ஜெகதீஷ்குருக்கள் உட்பட பௌத்த குருமார்களும், கலந்துகொண்டவர்களில் சிலரையும் படங்களில் காணலாம். (படம்மேலே: பாணந்துறை நிஸ்வர்காலித்)

தொழுகை நேரங்கள் 05 - 05.02.2018 - திங்கள் -செவ்வாய்

சுபஹ்	லுஹர்	அஸர்	மஃரிப்	இஷா
5.11	12.26	3.48	06.20	7.32

விழிப்புமாகாணம் 0 நிமிடங்கள் முற்படுத்தி கணிப்பிடவும்

கண்டி நகர் பள்ளிவாசல்கள் சம்மேளனம், கண்டி சிட்டி ஜும்மியதுல் உலமா சபை, கண்டி மீராமக்காம் பள்ளிவாசல் ஆகிய இணைந்து நடத்திய 70ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வு கண்டி மீராமக்காம் பள்ளிவாசலில் கேட்போர் கூடத்தில் கண்டி நகர் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் கே. ஆர். ஏ. சித்திக் தலைமையில் நடைபெற்றது. அந்நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் திலுகா ஏக்கநாயக பிரதம அதிதியாகவும் கண்டி உதவி இந்திய தூதுவர் இரேந்திர சிங்க சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். அத்துடன் மத்திய மாகாண சபை உறுப்பினர்களான எம். டி முத்தலிப், ஜெம்ஸுலாப்தீன் லாபிர், ஹிதாயத் சத்தார் ஆகியோர்களுடன் கண்டி மாவட்டச் செயலாளர் ஹிட்டி சேகர, கண்டி மாநகர ஆணையாளர், பிரதிப் பொலிஸ் மாஅதிபர், முப்படைகளின் உயர் அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

(சுதுநாகல் இக்பால் அலி)

பொத்துவிலுக்கு இன்று ஜனாதிபதி விஜயம்

(எஸ்.எஸ்.சம்சுல் ஹுதா)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொத்துவில் பிரதேச வேட்பாளர்களை ஆதரித்து பொத்துவில் இடம்பெறும் பிரசாரக் கூட்டத்திற்கு சுதந்திரக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன இன்று மாலை பொத்துவிலுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

முன்னாள் அமைச்சர் ஏ.எல். எம்.அதாவுல்லா, சுதந்திரக் கட்சியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளர் ஏ.எம்.அப்துல் மஜீத்தின் அழைப்பின் பேரில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் நீர்ப்பாசன அமைச்சர் விஜிதமுனி சொய்சா மற்றும் பாராளுமன்ற அமைச்சர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு 544 கைதிகள் விடுதலை

ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் 70 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாட்டிலுள்ள பல்வேறு சிறைச்சாலைகளிலுமுள்ள 544 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்தது.சிறு குற்றங்களுக்காகச் சிறையில் இருந்த கைதிகளில் நன்னடத்தை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டவர்களே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளதாகசிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஆணையாளர் எச்.எம்.டி.எல். உபுல்தெனிய அறிவித்தார்.

இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களுள் 6 பெண்களும் அடங்குகின்றனர். நீர்கொழும்பு சிறைச்சாலையிலிருந்து 56 கைதிகளும், மஹர சிறைச்சாலையிலிருந்து 46 கைதிகளும், வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து 28 கைதிகளும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையர் என்றவகையில் நாட்டை கட்டியெழுப்ப முன்வரவேண்டும்

கிழக்கு ஆளுநர் ரோஹித

(திருமலை அப்துல்சலாம் யாசீம்)

எமக்கு பின்னர் சுதந்திரமடைந்த பல உலக நாடுகள் எம்மை பின்தள்ளி துறைசார் ரீதியாக முன்னேற்றமடைந்து காணப்படுவதாகவும் ஆனால் நாம் அந்த நாடுகளை பார்க்கிலும் பிந்திய நிலையில் திற்பதாகவும் அனைவரும் இலங்கையர் என்ற அடிப்படையில் நாம் நாட்டை கட்டியெழுப்ப இடைங்கந்தம்புண வேண்டும் என்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகல்லாகம தெரிவித்தார்.

70ஆவது தேசிய சுதந்திர தின கொண்டாட்ட நிகழ்வுகளுக்கு இணையாக திருகோணமலை மாவட்ட சுதந்திர தின கொண்டாட்ட நிகழ்வுகள் இன்று திருகோணமலை பிரப்ரிக்கோட்டை வளாக கடற்கரை பிரதேசத்தில் கிழக்க மாகாண ஆளுநர் ரோஹித போகல்லாகமவின் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் மேலும் கூறுகையில்,

முன்னர் கொண்டாடப்பட்ட சுதந்திர தினத்திற்கும் இன்று கொண்டாடப்படுகின்ற சுதந்திர தினத்திற்கும் இடையே பாரிய வேறுபாடு காணப்படுகின்றது. ஜனநாயகம் வலுவான ஒரு காலகட்டத்தில் இன்றைய சுதந்திர தினம் கொண்டாடப்படுகின்றது. ஜனாதிபதி அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் பல அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து நாட்டு நலன்கருதி செயற்படுவது முக்கியமான அரசியல் திருப்புமுனையாக காணப்படுகின்றது.

ஆனாலும் கிழக்கு மாகாணம் பல்வேறு அம்சங்களை தன்னகத்தே கொண்ட பல்லின மக்கள் இணக்கமான முறையில் வாழ்கின்ற ஒரு மாகாணமாகும். ஏனைய மாகாணங்களுக்கு கிழக்கு மாகாணம் நல்லிணக்கம் சார்ந்த விடயங்களில் முன்னுதாரணமாக காணப்படுகின்றது. உலகிற்கு ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தை வெளிக்கொணர்கின்ற ஒரு மாகாணமாக கிழக்கு மாகாணம் காணப்படுகின்றது. நிலையான அபிவிருத்தியோடு தொடர்புடைய வகையில் அபிவிருத்தி செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வருடம் பல அபிவிருத்தி திட்டங்கள் கிழக்கு மாகாணத்தில் அமுலாக்கப்படவுள்ளன. கடந்த வருடம் 1200 பட்டதாரிகள் மற்றும் 300 டிப்ளோமாதாரர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் இவ்வருடமும் பட்டதாரி நியமனம் வழங்கப்படும் என்றும் கிழக்கு மாகாண ஆளுநர் இதன்போது தெரிவித்தார்.

தாவிரதுல் ஸைபியா தாருத் தவ்ஹீத் கலாபீடத்தின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இஸ்லாமிய மாநாடு கண்டி கெட்டம்பையிலுள்ள ஒக்ரே ரீஜென்ஸி ஹோட்டலில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவுக்கு ஜமாஅத் அன்சாரில் கன்னத்தில் முஹம்மதிய்யாவின் பொது தலைவரும் கலாபீடத்தின் பணிப்பாளருமான அஷ்ஷெய்க் எம். பீ எம். அபூபக்கர் சித்திக் மதனி மாநாட்டில் வெளியிடப்பட்ட மலரின் முதல் பிரதியைக் கையளிப்பதையும் ஜமாஅத் அன்சாரில் கன்னத்தில் முஹம்மதிய்யாவின் பொது தலைவர் அஷ்ஷெய்க் எம். பீ எம். அபூபக்கர் சித்திக் மதனி நீண்ட காலமாக கலாபீடத்தின் கல்வி வளர்ச்சிக்காக பாடுபட்ட ஜமாஅத் அன்சாரில் கன்னத்தில் முஹம்மதிய்யாவின் பொதுச் செயலாளரும் கலாபீடத்தின் செயலாளருமான ஏ. எல். கலீஃபா ரஹ்மானுக்கு (MA) விசேட விருது வழங்கி வைப்பதையும் மற்றும் கலாபீடத்தில் கல்வி கற்று உயர் தகைமையிலுள்ள கலாநிதி அஷ்ஷெய்க் எம். எம் முபாரக் அஷ்ஷெய்க் எம் எச். எம் இஸ்மாயில், கலாநிதி அஷ்ஷெய்க் அம்ஜத் ராசிக் உள்ளிட்டவர்களுக்கு விசேட விருது வழங்கி கௌரவிப்பதையும் பழைய மாணவர் சங்கதின் தலைவரும் பேராதனை பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம். இஸட். எம் நபீழ் மலர் ஒன்றை வழங்கி வைப்பதையும் இங்கு படங்களில் காணலாம்.

(படங்கள்- சுதுநாகல் இக்பால் அலி)

உதயங்க வீரதுங்க டுபாயில் கைது

ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க டுபாய் விமான நிலையத்தில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதன் பின் னர் கைது செய்யப்பட்டுள்ளார். அமெரிக்காவுக்கு செல்லும் வழியில் அவர் பயணம் செய்த விமானம் டுபாயில் தரையிறங்கி யிருந்த போது கைது செய்யப்பட்டுள்ளதா கவும் கூறப்படுகின்றது.

இவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. உக்ரைன் போராளிகளுக்கு ஆயுதங்களை வழங்கியமை, ரஷ்ய தூதரகத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் இரு மர்ம மரணங்கள் என்பவற்றிலும் இவர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

லங்கா சதொச
ලංකා සතොස LANKA SATHOSA
குறைந்த விலையில் உங்கள் இடத்தில்

தேசத்திற்கு விலையை நிர்ணயிப்பவர்

கைத்தொழில் மற்றும் வர்த்தக துறை அமைச்சு

தேசத்திற்கு விலையை நிர்ணயிப்பவருடன் தொழில் வாய்ப்புக்கள்

லங்கா சதொச வலையமைப்பானது நாடுமுழுவதும் 300ற்கும் மேற்பட்ட கிளைகளுடன் ரூபா.30 பில்லியன் புரள்வை கொண்ட இலங்கையின் பாரிய சில்லறை விற்பனை நிலைய வலையமைப்பாகும். நாம் எமது கீழ்க்காணும் குறிக்கோள்களை அடைய எதிர்பார்த்துள்ளோம்.

- வாழ்க்கை செலவை குறைத்தல்
- நாட்டு மக்களை வியாபாரங்களுடன் தொடர்புபடுத்தல்
- சீறு மற்றும் நடுத்தர வியாபாரிகளுக்கான வியாபார கோரலை நாடு முழுவதும் கொண்டு வர வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்தல்.

இதன் அடிப்படையில் நம் இலக்குகளை அடைவதுடன் எமது வியாபார நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்த எமது கிளைகளை 500 ஆக அதிகரித்து புரள்வை ரூபா.50 பில்லியனாக அதிகரிக்கும் நோக்கில் தொழில்சார் வல்லுனர்களை கீழ் காணும் வெற்றிடங்களுக்கு எதிர்பார்க்கின்றோம்.

வேலைவாய்ப்பு

விற்பனை உதவியாளர்

தகுதிகள்:

புற விண்ணப்பதாரிகள் (குறைந்தது 01 அல்லது 02)

01. க.பொ.த சாதாரண தரத்தில் கணித பாடம் உட்பட 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

க.பொ.த உ/த 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

02. தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் குறித்த பாடம் தொடர்பில் தேசிய தொழில்சார் தகுதி மட்டம் 4 (NVQ 4) ற்கு குறையாத சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

உள்ளக விண்ணப்பதாரிகள் (குறைந்தது 01 அல்லது 02)

01. மேலே புற விண்ணப்பதாரிகளுக்கு கோரப்பட்ட தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.
02. பிரதான Unskilled (PL1) குழுவிலான பதவியில் குறைந்தபட்ச ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை முடித்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

தேசிய தொழில்சார் தகுதி மட்டம் 2 (NVQ 2) ற்கு குறையாத சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

வயது :
18 வயதிற்கு குறையாதவாரும் 45 வயதிற்கு மேற்படாதவாரும் இருத்தல் வேண்டும். உயர் வயது எல்லை உள்ளக விண்ணப்பத்தாரர்களுக்கு கிடையாது.

சம்பள அளவு : PL 2-2016 - [ரூ.25,750 - 10 x 270 - 10 x 300 - 10 x 330-12 x 350-38,950]
நியமனத்தின் போது வழங்கப்பட்ட சம்பளத் தொகை ரூ.20,414/- உடன் 01-01-2018 ஆம் திகதி முதல் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படும் மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்.

விற்பனை நிலைய உதவியாளர்

தகுதிகள்:

புற விண்ணப்பதாரிகள்
க.பொ.த சாதாரண தரத்தில் கணித பாடம் உட்பட 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

வயது : 18 வயதிற்கு குறையாதவாரும் 45 வயதிற்கு மேற்படாதவாரும் இருத்தல் வேண்டும்.

சம்பள அளவு : PL 1-2016 - [ரூ.24,750 - 10 x 250 - 10 x 270 - 7 x 300-15 x 330-37,000]
நியமனத்தின் போது வழங்கப்பட்ட சம்பளத் தொகை ரூ.19,622/- உடன் 01-01-2018 ஆம் திகதி முதல் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படும் மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்.

விற்பனை நிலைய முகாமையாளர் MA-4

புற விண்ணப்பதாரிகள் (குறைந்தது 01 அல்லது 02)

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் கீழ் சந்தைப்படுத்தல் அல்லது வணிகம் தொடர்பான பாடங்களில் முதல் நிலை பட்டம்.
02. குறிப்பிட்ட துறையில் அங்கீகாரம் பெற்ற தொழில் முறை பட்டய நிறுவனமொன்றில் இடைநிலை தேர்வில் சித்தி பெற்றிருத்தல்.

உள்ளக விண்ணப்பதாரிகள் (குறைந்தது 01 அல்லது 02)

01. மேலே புற விண்ணப்பதாரிகளுக்கு கோரப்பட்ட தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.
02. பதவிக்கு உட்பட்ட தலைப்புப் பகுதியில் MA3 பிரிவின் பதவிக்கு குறைந்தபட்ச ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை கொண்டிருத்தல் வேண்டும்.

சம்பள அளவு : MA 4-2-2016 - [ரூ.37,970 - 10 x 755 - 15 x 930 - 5 x 1,135 - 65,145]
நியமனத்தின் போது வழங்கப்பட்ட சம்பளத் தொகை ரூ.30,074/- உடன் 01-01-2018 ஆம் திகதி முதல் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படும் மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும். மற்றும் தொலைபேசி கொடுப்பனவு 1,500/-

வயது:
22 வயதிற்கு குறையாதவாரும் 45 வயதிற்கு மேற்படாதவாரும் இருத்தல் வேண்டும். உயர் வயது எல்லை உள்ளக விண்ணப்பத்தாரர்களுக்கு கிடையாது.

பிராந்திய முகாமையாளர் JM - 1-1

தகைமைகள் :

புற விண்ணப்பதாரிகள் (குறைந்தது 1 அல்லது 2)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் கீழ் கணக்கியல் அல்லது முகாமைத்துவத்தில் துறையில் முதல் நிலை பட்டம்
2. குறிப்பிட்ட துறையில் அங்கீகாரம் பெற்ற தொழில் முறை பட்டய நிறுவனமொன்றில் இடைநிலை தேர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்

உள்ளக விண்ணப்பதாரிகள் (குறைந்தது 1 அல்லது 2)

01. மேலே புற விண்ணப்பதாரிகளுக்கு கோரப்பட்ட தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.
02. வெற்றிடங்கள் உள்ள இடங்களில் (MA4) பிரிவில் முதல் தர நிலையில் குறைந்தது 05 வருட திருப்திகரமான சேவையை வழங்கியவராக இருத்தல் வேண்டும்.
03. வெற்றிடங்கள் உள்ள இடங்களில் (MA3) பிரிவில் முதல் தர நிலையில் குறைந்தது 08 வருட திருப்திகரமான சேவையை வழங்கியவராக இருத்தல் வேண்டும்.
04. மொத்த விற்பனை நிறுவனத்தில், சதொச சில்லறை விற்பனை நிலையத்தில் அல்லது லங்கா சதொச நிலையத்தில் ஆகமொத்தம் 15 வருட சேவை அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.

வயது :
22 வயதிற்கு குறையாதவாரும் 45 வயதிற்கு மேற்படாதவாரும் இருத்தல் வேண்டும். உயர் வயது எல்லை உள்ளக விண்ணப்பத்தாரர்களுக்கு கிடையாது.

சம்பள அளவு : JM 1-1- 2/2006 - [ரூ.42,600 - 10 x 755 - 18 x 1,135 - 70,580]
நியமனத்தின் போது வழங்கப்பட்ட சம்பளத் தொகை ரூ.33,770/- உடன் 01-01-2018 ஆம் திகதி முதல் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படும் மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்.

ஏனைய கொடுப்பனவுகள் :
(தொலைபேசி கொடுப்பனவு 3,000/- + போக்குவரத்து கொடுப்பனவு ரூ. 15,500/- பிராந்திய முகாமையாளர் கொடுப்பனவு 5,000 /-)

கொள்முதல் முகாமையாளர் (வகை) - MM 1-1

புற விண்ணப்பதாரிகள் (குறைந்தது 1 அல்லது 2)

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் கீழ் சந்தைப்படுத்தல் அல்லது வணிகம் தொடர்பான பாடங்களில் முதல் நிலை பட்டம்

அத்துடன்

முதல் நிலை பட்டமொன்றை பெற்றதன் பின் குறிப்பிட்ட துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது ஒரு வருட முன் அனுபவம்

02. குறிப்பிட்ட துறையில் அங்கீகாரம் பெற்ற தொழில் முறை பட்டய நிறுவனமொன்றில் இடைநிலை தேர்வில் சித்தி பெற்றிருப்பதுடன் குறிப்பிட்ட துறையில் குறைந்தது ஒரு வருட முன் அனுபவம்

உள்ளக விண்ணப்பதாரிகள் (குறைந்தது 1 அல்லது 2)

01. மேலே புற விண்ணப்பதாரிகளுக்கு கோரப்பட்ட தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.
02. வெற்றிடங்கள் உள்ள இடங்களில் கணிஷ்ட முகாமையாளராக (JM) முதல் தர நிலையில் குறைந்தது 05 வருட திருப்திகரமான சேவையை வழங்கியவராக இருத்தல் வேண்டும்.

வயது : 45 வயதிற்கு குறைந்தவராய் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு வயதெல்லை கிடையாது.
ஊதிய குறியீடு : MM- 1-1
சம்பள அளவு : MM- 1-1 - 2/2016. [ரூ. 53,175-10X 1,375 -15 X 1,910-95,575]
நியமனத்தின் போது வழங்கப்பட்ட சம்பளத் தொகை ரூ.42,161/- உடன் 01-01-2018 ஆம் திகதி முதல் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படும் மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்.

மற்றைய பிரதிலாபங்கள் :
(கையடக்கத் தொலைபேசி கொடுப்பனவு ரூபா.3,000/- + போக்குவரத்துக் கொடுப்பனவு ரூபா.12,500/-)

சகல விண்ணப்பதாரர்களும்

01. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. நாட்டின் எப்பகுதியிலும் சேவை புரியும் மனோபான்மையும் உடல், உள ரீதியான வலிமையினையும் கொண்டிருத்தல் வேண்டும்.
03. சிறந்த தார்மீக தன்மை கொண்டிருத்தல் வேண்டும்.

நியமனத்தின் தன்மை :
ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பக நிதியம் ஆகியவற்றுக்கான உரிமையுடன் நிரந்தரமாக நியமனமாகும்.

சிறந்த விண்ணப்பதாரிகள் பின்வருவனவற்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

- தவறுகள் நேரும் போது அதை புரிந்து அதற்கான தீர்வை சமுகமாக வழங்குவதுடன், ஒழுங்குபடுத்தல் முறை, மதிப்பீடு, விமர்சனங்கள் என்பவற்றை கையாள்வதுடன் கட்டுக்கோப்பு உள்ளவராக இருத்தல் வேண்டும்.
- அனைவருடனும் சிறந்த நட்புறவை பேணும் திறமையுடன், சிறந்த தலைமைத்துவ பண்பை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- தகவல் தொழிநுட்பத்தில் சிறந்த திறமை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- பல்வேறு பொதனைகளைக் கொண்டு குழுக்களுக்கு தலைமைத்தாங்கி வழி நடத்தல் தொடர்பிலான திறன், மாவீட் மற்றும் ஏனைய வளங்களை கையாளுதல் மற்றும் முகாமைத்துவம் செய்யும் திறன். (அலைபேசி மட்டுமே வரிசைப்படுத்தப்பட்ட பட்டியலிடப்பட்ட வேட்பாளர்களுடன் தொடர்புடையதாக இருக்கும்)

நீங்கள் இத்தகைமைகள் மற்றும் முன் அனுபவத்தை கொண்டுள்ளீர்களெனின் உங்களுடைய சுயவிபரக்கோவையுடன், உங்கள் சான்றிதழ் பிரதிகளை இந்த விளம்பரம் பிரசுரமாகி 10 நாட்களுக்குள் எமக்கு கிடைக்கப்பெறுமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைப்பீர்கள்.
(கோரப்படும் வெற்றிடத்தை விண்ணப்பம்பாரவை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.)

தலைவர்
லங்கா சதொச லிமிடட்
இல-27, சதொச செயலாளர் காரியாலயம், 05 ஆம் மாடி வொக்ஹோல் வீதி, கொழும்பு 02

முன்மாதிரியான அக்குறணையை உருவாக்குவோம்

ஐ.தே.க. வேட்பாளர் ஹுசைன்

முன்னாள் அக்குறணை பிரதேச சபை உறுப்பினர். ஹுசைன் ஹாஜி ஐக்கிய தேசிய கட்சிக்காக பற்றுறுதியுடன் சேவையாற்றக் கூடியவர். நடுநிலையாக சிந்தித்து, சமாதானம் சக வாழ்வை நோக்காகக் கொண்டு சேவையாற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் பிரசார மேடைகளில் இவருடைய குரல் ஓங்கி ஒலிக்கும் குரலாக உள்ளது. தம் பிரதேசத்தில் இவர் செய்கு சேவை காலத்தால் அழியாதவை. நல்ல மனிதநேயப் பண்புகளையுடைய இவர் நவமணிப் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.

உங்களுடைய ஆரம்ப கல்வி வாழ்க்கை பற்றிக் கூறுவீர்களா?

பதில்- உக்குவளை அழகி பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று பின்னர் நம்புக்- என முன்னாள் வித்தியாலயத்தில் க.பொ.த. உயர் தரம் வரையிலும் கல்வி கற்றேன். பாடசாலையை விட்டு விலகிய பின்னர் பொதுத் தொண்டுகளில் ஈடுபட்டேன்.

கேள்வி- நீங்கள் அரசியல் பிரசார மேடைகளில் தீவிரமான பேச்சாளர் என்ற வகையில் எவ்வாறு உங்களுக்கு இந்த ஆர்வம் ஏற்பட்டது.?

பதில்- கட்சி மாறாத கொள்கை வாதி அரசியல் வாதி நான். அரசியல் என்றால் என்ன? அரசியல் என்பது உழைப்பில்லை மக்களுக்காகச் செய்யும் சேவை. அந்தக் காலத்துத் தலைவர்கள் தம்மிடம் இருந்த பொருட்களை, சொத்துக்களை, அறிவை மக்களுக்குப் பயன்படுத்தினார்கள். இந்த எண்ணப்பாடுகளுடன் 1970 களில் எனக்கும் அரசியல் தாகம் வந்தது.

அதன் காரணமாக டட்லி சேனாநாயக, டி. எம். சேனாநாயக, மண்டபாநாயக, ஜே. ஆர் ஜயவர்தன என் பலரிதும் அரசியல் தலைவர்களுடைய வரலாற்று நூல்களைத் தேடிப்படித்தேன். அதற்குப் பின்னர் வந்த ஆர். பிரேமதாச, ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடைய அரசியல் பணிகளைத் தேடிப் படித்து அவர்கள் எவ்வகையான அரசியல் செய்தார்கள் என்பதை மனதிற்கு எடுத்து அரசியல் பிரசார மேடைகளில் அன்று தொட்டு இன்று வரையிலும் உரையாற்றி வருகின்றேன். அதேபோலவே அரசியல் சேவைகளிலும் சமூக இயக்கச் செயற்பாட்டிலும் ஈடுபாடு காட்டி தடம் பதித்துள்ளேன்.

1977 களில் இருந்து மறைந்த அமைச்சர் ஏ. சீ. எம். ஹமீதுடைய காலத்தில் நான் ஓர் அரசியல் மேடைப் பேச்சாளன். முன்னாள் மறைந்த அமைச்சருடன் இணைந்து பல அரசியல் அனுபவங்களைப் பெற்ற நான் அமைச்சர் எம். எச். ஏ ஹலீமின் வழிகாட்டலுடன் ஐ. தே. கட்சியின் வளர்ச்சிக்காக பங்காற்றுகின்றேன்.

அப்படியானால் நீங்கள் எப்போது அரசியலுக்குள் பிரவேசித்தீர்கள்?

பதில்- 2011 ஆம் ஆண்டு அக்குறணை பிரதேச சபைத் தேர்தல் நடைபெற்றது. அப்பொழுது மாற்று மக்கள் அரசியலில் தீங்கள் ஈடுபட்டாக வேண்டும் என என்னை வற்புறுத்தி வேண்டிக் கொண்டார்கள். அந்த வகையில் நான் அப்போது எதிர் கட்சியில் இருந்த ஐ. தே. கட்சியில் போட்டியிட்டு சபை மக்களின் ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்டேன்.

உங்களுடைய சமூக அரசியல் பங்களிப்பு என்னவென்று கூறுவீர்களா?

பதில்- ஆம். அதாவது என்னுடைய தூர நோக்கு என்னவென்றால் மனிதன் கல்வியில் முன்னேற வேண்டும். அதில் இன மாமியன் இந்து பௌத்தம் என்றொரு வேற்றுமை இல்லை. ஓர் அரியணி பல இலட்சக் கணக்கான மக்களுக்கு உதவக் கூடியவன். எங்கள் ஊரின் பாடசாலையில் 20 வருடங்களாக கல்வியின் வீழ்ச்சியை நாம் கண்டோம். கல்வி மீது ஆர்வம் உள்ளவர்கள் அந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்காக யாரும் முன் வரவில்லை. 50 சத விகிதமான ஆசிரியர் பற்றாக் குறை இருந்தது. ஆசிரியர்கள் 18 பேர் தேவை யாகும். 9 பேர் மட்டும்தான் இருந்தனர். அந்த 9 பேர்களில் இருவர் விடுமுறை எடுத்தால் 7 பேர் தான் பாடசாலைக்கு வருவார்கள். இது ஒரு பாரிய பிரச்சினை. இந்தப் பாடசாலையில் மிகவும் வருமானம் குறைந்த பிள்ளைகள்தான் படித்தார்கள். இந்தப் பாடசாலையின் கல்வி வளர்ச்சியில் என்னுடைய பங்களிப்பு அதிகமாவு இருக்கிறது.

22 வருட கல்வி வீழ்ச்சியை நாங்கள் அவ்வு செய்தோம். அதன் பின்னர் மாணவர்களுக்கு உரையா நிதியான கல்வி வழங்கியதோடு மாணவர்களை இனம் கண்டு தேவையான உதவிகளைப் பெற்றுக் கொடுத்தோம். படிக்க ஆசை இருக்கின்றது. அடிப்படைத் தேவையான வசதிகள் இருக்க வில்லை. கற்றலுக்குத் தேவையான புத்தகம் உள்ளிட்ட பொருட்களை மறைமுகமாக நாங்கள் பெற்றுக் கொடுத்தோம். இன்று அப்படியான மாணவர்கள் உயர் கல்விக்குச் சென்று ஒரு நல்ல நிலைக்கு வந்திருக்கின்றார்கள். இப்போது மனைக்கு சந்தோசமாக இருக்கிறது. ஒவ்வொரு அரசியல் வாதியும் கல்வியின் வளர்ச்சிக்காக மிகவும் முக்கியமானதாகப் பாடுபட வேண்டும்.

அந்த வகையில் இந்தப் பாடசாலைக்கு எமது கோரிக்கையை அடுத்து மறைந்த மாற்றும் அமைச்சர் ஏ. சீ. எம் ஹமீதினால் 1991 -2- 27 ஆம் திகதி புதிய கட்டிடம் ஒன்று கிடைக்கப்பெற்றது.

அதற்குப் பின்னர் நாங்கள் கலந்தாலோசனை முறையை பார்த்தோம். எங்கள் மக்கள் ஊரில் இருந்து 8 கிலோ மீட்டர் தூரமாவு கலந்தாலோசனை தரும் செல்லும் பொதுவாக கம்பளிப் தாய்மார்கள், பிள்ளைகளுக்கு தடுப்பூசி போடுதல் மற்றும் திரிபோசா போன்ற மருத்துவ கலந்தாலோசனைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எமது மக்கள் எதிர் நோக்கியிருந்தார்கள். 1996 ஆம் ஆண்டளவில் நம்புக்கள கலந்தாலோசனை தரும் மத்திய நிலையத்தைப் பெற்றுக் கொண்டோம்.

பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கியுள்ள மக்களுக்கும் பொருளாதார ரீதியில் வலிமையடைந்துள்ள செல்வந்தர்களுக்கு மிடையேயான ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்தோம். நம்புக்கள என்ற ஊரில் ஒரு கஷ்டம் என்று வந்தால் எல்லோரும் ஒன்று சேர்ந்து உதவி செய்யும் மனப்பான்மை நாங்கள் உருவாக்கியுள்ளோம்.

சக வாழ்வு ஒற்றுமை பற்றி அரசியல்வாதிகளும் தூர நோக்கோடு சிந்திக்க வேண்டும். இதை நாங்கள் 2003 ஆம் ஆண்டு முதல் இன்று வரையிலும் பௌத்த சமயத் தலைவர்களை எங்கள் ஊர் பள்ளிவாசல்களுக்கு அழைத்து வந்து சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தி வருகின்றோம். அத்துடன் 2009 ஆம் ஆண்டு பெரிய தடுப்புத் திட்டத்தை நாங்கள் அறிமுகப்படுத்தினோம். இது ஒரு தூர நோக்குடன் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டம். அரசியல்வாதியாக இருப்பவர்களோ அல்லது சமூக சேவையாளராக இருப்பவர்களோ குறை வைத்து தண்ணீரில் இருப்பவர் போன்று இருக்கக் கூடாது. கடலில் குதித்து அல்லது செய்பவராக இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்தேன்.

கடந்த காலமாக வாசிப்புத் துறையிலும் உலகத்தில் என்ன நடக்கிறது என்பதை விளங்கிக் கொள்வதற்காக நம்புக்கள ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு பிரதேச சபையின் ஊடாக இலவசமாக தினமும் ஐந்து பத்திரிகை எடுத்துக் கொடுத்துள்ளேன். இது அதிகமான இடங்களில் நடைபெறவில்லை என நான் கருதுகின்றேன். நான் பிரதேச சபை உறுப்பினராக இருந்த காலகட்டத்தில் இதனை செய்ததனையால் இன்று வரை பத்திரிகைகள் பள்ளிவாசலுக்கு வருகின்றது. வருட இறுதியில் வாசித்த பத்திரிகையைத் திருப்பிக் கொடுப்பது மட்டுந்தான். அதற்கான வசதிகள் பள்ளி வாசலில் செய்யப்பட்டுள்ளன.

விசேடமாக அற்றவடன் விடயத்தில் இலங்கையில் மருத்துவமனையில் பயன்படுத்துகின்ற சேலைன் போத்தல் எரிக்கவும் இயலாமல் புதைக்கவும் இயலாத நிலையில் இருந்தது. அதை நாங்கள் கொள்வனவு செய்து சேலைன் போத்தலை இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ரிய பொருளாக மாற்றியுள்ளோம். இன்று அது மீளவும் மாற்றீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. அக்குறணை பிரதேச சபை ஆற்றினால் உக்குவளை மின் உற்பத்தி நிலையத்திற்கு பெரும் பிரச்சினையாக மரக்குற்றிகளும் அரிசியாலையின் உமியும் இருக்கிறது. காலம் சென்ற அமைச்சர் ஹமீத் அன்று இருந்த அமைச்சர் காமினி அத்துக்கொரளவுடன் கதைத்து தற்காலிகமாக அதனை எரிப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

எங்கள் பாடசாலை மலை உச்சியில் இருக்கிறது. இப்பாடசாலையில் மண் சரிவு ஏற்படுவது வழக்கமாகும். 1993 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயற்சி செய்தோம். ஆனால் பயன்கிட்டவில்லை. புதிய நல்லாட்சியின் பிரதமர் அமைச்சர் ஹலீமின் உதவியோடு அளித்த ஒதுக்கீடுகளுக்கு அமைச்சரைச் சந்தித்து அந்த அமைச்சின் ஊடாக ஒரு கோடி 12 இலட்சம் ரூபா செலவில் மதுகரம்பு மதில் அமைக்கப்பட்டு வருகின்றது.இவை போன்ற பல வேலைத் திட்டங்களுக்கு பெரும் பங்காளராக இருந்து அர்ப்பணிப்புடன் சேவைகளை ஆற்றி வருகின்றேன்.

உங்களுடைய எதிர்காலத் திட்டங்கள் என்ன?

பதில்- என்னுடைய வட்டாரத்திலுள்ள மீனாக, உடுகல பிரதேசத்தில் 300 க்கும் மேற்பட்ட தமிழ் வாக்காளர்கள் உள்ளார்கள். இந்த தமிழ் மக்கள் தொழிலாளர்கள் இவர்கள் எந்த நாளும் ஏமாற்றப்படுகிறார்கள். அவர்களுக்கு காணி உரிமை இல்லை. விசேடமாக மீனாவத்த ,ஹல்பாகொல்ல வந்த மக்களுக்கு காணி உரிமை இல்லை. தண்ணீர் வசதி இல்லை. மலசல கூடம் இல்லை. இவர்கள் மிகவும் கவலைகளோடு வாழ்கிறார்கள். இவர் களைப் பற்றி தான் கவனிக்க விட்டால் இல்லாமியன் என்ற வகையில் வெட்கப்பட வேண்டும் என்பது மட்டுமல்ல பாவமும் கூட. இவர்களுடைய விடயத்தில் அமைச்சர் திகாம்பரத்துடன் பேசி இதைப் எப்படித் தீர்க்கலாம் என்பதை பற்றி முயற்சிகளை முன்னெடுக்கவுள்ளேன்.

அதே போன்று என்னுடைய வட்டாரத்தில் மெடுல்ல , வலகடுல பிரதேசத்தில் சிங்கள வாக்காளர்கள் இருக்கின்றனர். இங்குள்ள மொழியை மக்களுக்கு உள்ள மிகவும் முக்கியமான பிரச்சினை போக்குவரத்துக்கான பாதைப் பிரச்சினையாகும். விசேட உடல் மக்களுக்கு விளையாட்டு மைதானம் இல்லை. பொதுவாசிகசாலை இல்லை. பொது மைதானம் இல்லை. குடிநீர் பிரச்சினை இருக்கிறது. எனினும் விசேட உடல் பிரதேச மக்களுக்கு குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஏற்கனவே அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. கண்டி கட்டுகஸ்தோட்டையிலுள்ள தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்குச் சென்று பார்த்தால் அது பற்றி முழுமையாக அறிந்து கொள்ளலாம்.

இந்த முறையில் எங்கள் ஊர் நம்புக்களவை எடுத்துக் கொண்டால் பிரதானமாக குற்றொது தேவைப்படுவது விளையாட்டு மைதானமாகும். கடந்த காலத்தில் பிரதேச சபையின் ஊடாக 1994 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மைதானம் இன்னும் அபிவிருத்தி செய்யப்படவில்லை. இது அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். பாடசாலையாளர் அங்கேயே சகல விளையாட்டு அமைப்புக்களை கொண்ட விளையாட்டு மைதானம் அமையப்பெற வேண்டும். இதற்கான முயற்சிகளை நான் மேற்கொண்டு இருக்கின்றேன். அத்துடன் மீளாள் பள்ளிவாசலுக்குக் கீழ் செல்லும் வீதி இப்போது கால் நடைப்பாதையாக இருக்கிறது. அதனை 8 அடிப்பாதையாக அமைப்பதற்கான முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கின்றேன். தெற்கிலுள்ள பாதை இப்போது பாவனையற்ற முறையில் பாதிக்கப்படாதவாறு இருக்கின்றது. எனது ஊரின் மலைய கிராம அரிசி குத்தி சபைக்குச் செல்லும் பாதை. அந்தப் பாதையையும் 8 அடிப் பாதையாக அமைப்பதற்கான முயற்சியை மேற்கொள்வேன். ஊரிலுள்ள பிள்ளைகளுக்கு உயர்வான தீவிரமான விழிப்புணர்வூட்டல் மற்றும் சிறுவர் பூங்கா அமைப்பதற்கான முயற்சியையும் நான் மேற்கொள்வேன்.

அதே நேரத்தில் அவசரத்துக்கென மற்றும் அக்குறணை நகரத்தில் பாரிய பிரச்சினைகள் உள்ளன. பொதுமயானம் இல்லை பஸ்தரிப்பு இடங்கள் இல்லை. தனியார் வாகனங்கள் நிறுத்துவதற்கு இடவசதிகள் இல்லை. பொதுச் சந்தை, அக்குறணை பிரதேச காணியில் சிறுவர் பூங்கா அமையவை அவசியமாகும். கழிவுப் பொருட்கள் அகற்றுதல் போன்ற மக்களின் பிரச்சினை அறிந்து சேவையாற்ற வேண்டும். உள்ளத்தில் அமைதி நிறைந்த அக்குறணைப் பிரதேசத்தை உருவாக்க நானும் ஐக்கிய தேசிய கட்சி மனை உறுப்பினர்களும் இணைந்து செயற்படுவோம். இம்முறை திறன் வாய்ந்த வேட்பாளர்களை எமது அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் களமிறக்கியுள்ளார். நாங்கள் முன்மாதிரியான அக்குறணையை உருவாக்க முயற்சி செய்வோம். அல்லாஹ்வின் உதவியால் அது நடைபெறும் என்று நம்புகின்றோம்.

நான் மட்டுமல்ல எந்தவொரு அரசியல் வாதியோ அல்லது பொதுச் சேவையாளரோ தான் வாழும் குழுவில் எந்த மனித இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் இன மத, பிரதேச வேறுபாடுகளை தவிர்த்து அதற்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். என்னுடைய நம்புக்கள மக்கள் நன்றியுள்ளவர்கள். அவர்கள் எப்போதும் என்னோடு இருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

தீர்வினை வலியுறுத்தும்

காஷ்மீர் ஒருமைப்பாட்டு தினம்

உலகெங்கிலும் வாழ்கின்ற பாகிஸ்தானிய சமூகம் பெப்ரவரி 5 ஆம் திகதி காஷ்மீர் மக்களுடன் இணைந்து ஒற்றுமையினையும் தங்கியக்தினையும் வெளிப்படுத்துகின்றனர். காஷ்மீர் ஒற்றுமைத்தினமானது 1990ம் ஆண்டு தொடக்கம் பெப்ரவரி 5ம் திகதி இந்தியாவின் ஆக்கிரமிப்பிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. சுமார் 10 மில்லியன் சனத்தொகையுடன் (2001) 139,000 சதுர கிலோமீற்றர் (53,700 சதுர மைல்) பரப்பளவுடைய காஷ்மீர் மாநிலம் பாகிஸ்தானின் மேற்கு பிரதேசத்துடன் இணைந்துள்ளது.

அத்துடன் 740 கிமீ எல்லைக் கட்டுப்பாட்டு பகுதியானது அந்நியப்பகுதியினை அளவட் காஷ்மீர் மற்றும் அக்சின் சீன, திபெத், கிழக்கில் லடாக் போன்ற பகுதிகளிலிருந்து வேறுபடுத்துகின்றது. இம் மாநிலம் இந்து நதி, சைனாப், ஜெலிறும், நுப்ரா லியொக், சுரு மற்றும் மன்மக்னர் நதிகளினால் வடிகட்டப்படுகின்றமை சிறப்பம்சமாகும். அப் பகுதியானது பனிக் கட்டிகளால் மூடப்பட்டிருக்கும் உயர் மலைகள், பனிக்கு போன்ற நீல நிற வானம், கண்களை நீண்டிழுக்கின்ற அழகிய குளங்கள் மற்றும் மலைகள் படர்ந்திருக்கும் பச்சைப் புல்;வெளிகளின் இயற்கை அழகினால் பூமியின் சொர்க்கப்பகுதியாக வர்ணிக்கப்படுகின்றது.

1947ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஜம்மு காஷ்மீர் மன்னராகிய உள்ளூர் மக்களின் விருப்பத்திற்கு மாறாக ஜம்மு மற்றும் காஷ்மீர் இந்தியாவுடன் இணைவதாக அறிவித்த நாள் தொடக்கம், காஷ்மீர் மக்கள் பாகிஸ்தானுடன் இணைவதற்கான கோஷங்களை இன்று வரை எழுப்பியவருகின்றனர். எல்லாறையிலும், 'காஷ்மீர் இயக்கமானது' பிரிந்தாளிய ஆட்சியாளர்கள் காஷ்மீர் நிலத்தினை கிகியர்களுக்கு ஒப்பந்தத்தின் அடிப்படையில்; விற்றபொழுது ஆரம்பிக்கப்பட்டது.

1931ம் ஆண்டு டோக்ரா ஆட்சியாளர்களுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட அம் இயக்கமானது இற்றைவரை காஷ்மீர் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு வருவதற்கு எதிராக போராடிக்கொண்டிருக்கின்றது.

பாகிஸ்தானிய மக்கள் காஷ்மீரில் இடம்பெறுகின்ற இந்தியாவின் மனித உரிமை மீறல்களை கண்டிப்பதற்காக தங்களது ஐக்கியம் மற்றும் ஒற்றுமையினை காஷ்மீர் மக்களுடன் இணைந்து வெளிப்படுத்தியவருகின்றனர். ஆதாரபூர்வமான உண்மையாக தெரிவு, 1989ம் ஆண்டு தொடக்கம் 2015 ஆண்டு வரையில் மொத்தமாக 94,000 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் பல்வேறு முகாம்களில் தடுப்புக் காவலில் இருந்த 8000 பேர் இன்றுவரையில் கொல்லப்பட்டுள்ளனர். சுமார் 126,392 பொதுமக்கள் கைது செய்யப்பட்டிருப்பதுடன் 1,06,955 கட்டிமானங்கள் இற்றைவரையில் அழிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் 22,964 பெண்கள் இராணுவ ஆக்கிரமிப்பினால் காயமடைந்துள்ளதுடன் 10,151 பெண்கள் கட்டுப் பாவியல் வன்புணர்வுக்குட்பட்டுள்ளனர். மேலும் 1,07542 சிறுவர்கள் இந்திய ஆக்கிரமிப்பு காஷ்மீரில் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, டெய்லி காடியன் என்ற பத்திரிகையின் அறிக்கையின்படி இந்திய ஆக்கிரமிப்பு காஷ்மீரில் பரவலான மனித உரிமை மீறல்கள் இந்திய உயர் பாதுகாப்பு அதிகாரிகளாலும் ஏனைய இராணுவ பாதுகாப்பு படையினராலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஐக்கிய இராச்சியத்தில் முன்னாள் செய்தித் தவான டெய்லியில் மேற்குறிப்பிட்ட கட்டுரை பிரசுரிக்கப்பட்டதுடன் அக் கட்டுரையில் இந்தியாவின் கீழ் நிலை பொலிஸ் அதிகாரிகள்; உட்பட இராணுவ ரெஜிமெண்டுகள் வரை சுமார் 500 அதிகாரிகள் இக் குற்றங்களை புரிந்துள்ளதற்கான ஆதாரங்கள் இலங்கை மாநிலத்தில் குற்த சட்ட ஆவணங்கள் குழு விசாரணை மழங்கப்பட்டுள்ளது.

அக் கட்டுரையில் ஆசிரியர் ஜெனன் பக் புது தில்லியில் வசிக்கின்றார். அவர் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் இவ்வாறான மனித உரிமை மீறல்கள் சுமார்; 20 வருடங்களிற்கும் மேலாக இந்திய ஆக்கிரமிப்பு பகுதியில் சட்டவிரோதங்களுக்கு எதிரான மத மற்றும் சுதந்திர போராட்டங்களுக்கு மதிராக மேற்கொள்ளப்படுகின்ற ஆயுத வன்முறைகளுடன் தொடர்புபடுவதுடன் இயற்றிய கடுதல், கற்பழிப்பு, சித்திரவதை மற்றும் கடத்தல் என்பவரும் இடம்பெற்றுள்ளன என கூறுகின்றார்.

ஐக்கிய நாடுகள் சபையின் நிவுச்சி நிரலில் ஜம்மு மற்றும் காஷ்மீர் சம்பவமானது தீர்க்கப்படாத பழமையான விடயமாகும். 1948ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் 1971 மே மாதம் வரையில், ஐக்கிய நாடுகள் அமைப்பானது ஜம்மு மற்றும் காஷ்மீர் விவகாரம் தொடர்பாக இருபது தீர்வுத்திட்டங்களை நிறைவேற்றியுள்ளதுடன் பல்வேறு விவாதங்கள் மற்றும் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளது. அத்தோடு ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் தீர்வுத்திட்டம் 1951 இலக்கம் 91,96 மற்றும் தீர்வுத்திட்டம் 1952 இலக்கம் 98 ஆகிய பாரபட்சமற்ற பொதுவாக்கெடுப்பினை வலியுறுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தியா மற்றும் பாகிஸ்தானிற்கான ஐக்கிய நாடுகளின் ஆணைக்குழுவின் தீர்மானங்கள் உள்ளடங்கலாக ஐக்கிய நாடுகள் சபையானது ஜம்மு மற்றும் காஷ்மீர் மக்களின் விருப்பத்திற்கிணங்க அவர்களின் எதிர்காலத்தினை தீர்மானிப்பதற்கான சுதந்திரமான மற்றும் பாரபட்சமற்ற பொது வாக்கெடுப்பினை நடத்துமாறு இந்தியாவிடம் கேட்டுக்கொண்டது.

எல்லாறையிலும், 1948 மற்றும் 1962 சீன - இந்திய யுத்த காலப்பகுதியில் யாரைத்த பிரதம மந்திரி நேரு அவர்களால் நேரு அமாம்பத்தில் ஐ.நா வின் தீர்வினை ஏற்றுக்கொண்டாலும்; அத் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு மாறாக வந்ததுடன் காஷ்மீர் விவகாரம் தொடர்பாக யுத்த முடிவின் பின்னர் பாகிஸ்தானுடனான பேச்சுவார்த்தைகளுக்கு வாக்குறுதியளித்திருந்தார்.

இரு நாடுகளும் இவ்விடயத்திற்காக தனித்து யுத்தங்களை இற்றைவரை சந்தித்துள்ளன. இந்த வகையில், 'நம்பிக்கையினை கட்டியெழுப்பும் நடவடிக்கை' உள்ளடங்கலாக பல்வேறுபட்ட இருதரப்பு பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றாலும் இந்தியா எப்பொழுதும் அதனை ஒதுக்கியே முன்னெடுத்துடன் அதேசமயம் பாகிஸ்தான் ஐக்கிய நாடுகள் அமைப்பின் கீழ் அம்முரண்பாட்டினை தீர்த்துக் கொள்ள தற்பாரிய முயற்சிகளை மேற்கொண்டது.

இது தொடர்பாக, இவ்வமாவாத 'நம்பிக்கையினை கட்டியெழுப்பும் நடவடிக்கை தொடர்பாக கலந்துரையாட விரும்பினாலும் புது டில்லி ஒருபொழுதும் காஷ்மீர் சம்பவ தொடர்பாக எவ்வித எக்குவிப்பு சமிக்ஞைகளையும் வெளிப்படுத்தவில்லை என்பதே உண்மை. அத்துடன்; இந்தியா எப்பொழுதும் காஷ்மீர் தொடர்பான தீர்வினிற்கு தடைக்கல் காட்டி காலத்தை வீணடித்தது.

எல்லாறையிலும் இந்தியா சமாதான பேச்சுவார்த்தை என்ற போர்வையில் காஷ்மீரிற்கான தீர்வினை ஒதுக்கி வைக்க விரும்பியதுடன் காஷ்மீர் தொடர்பாக எவ்வித ஆக்கபூர்வமான முடிவுகளையும்; மேற்கொள்ளவில்லை.

இவ்வாறாயினும் காஷ்மீரில் எல்லை பகுதியில் இந்திய படைகள் தங்களது ஆக்கிரமிப்பினை தொடர்ந்ததுடன் பாகிஸ்தானிய சேதனை சாவடிகள் தாக்கப்பட்டன.

அத்தோடு அப்பாவி பொதுமக்களையும் பாகிஸ்தானிய இராணுவ வீரர்களையும் கொன்று சேதங்களை விளைவித்தனர். இது தவிர இந்திய அரசியல் மற்றும் இராணுவ உயரதிகாரிகள் நிரம்பப்பெற்ற சமாதான குழுவின் வருகையினை தடுத்தல், பாகிஸ்தானிய விளையாட்டு வீரர்களை திருப்பி அழைப்பதல், பாகிஸ்தானிய கலாச்சார தூதுவர்களுக்கெதிராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளுதல், பாகிஸ்தானிய தூதரக அதிகாரிகளின் கடவைக்கு இடையூறுவிளைவித்தல், இந்திய இராணுவம் மற்றும் விமானப் படையுடைய பாகிஸ்தானிய இராணுவ தலைமையகங்களை பயமுறுத்துதல், அணுவாயுதம் மற்றும் இரசாயன யுத்தம்; நிமித்தம் காஷ்மீர் வாழ் பொதுமக்களை பதுங்கு குழிகள் அமைக்குமாறு ஆணை பிறப்பித்தல் போன்ற யுத்த அச்சுறுத்தல்களை உருவாக்க முயற்சிகளை மேற்கொண்டனர். இப்பிரச்சாரத்தின் நோக்கம் பாகிஸ்தானை தீவிரவாதிப்பதாகவும் ஒவ்வொரு நேரத்துக்கும் முன்னர் விளம்பரம் தேடுவதாகவும் அமைந்தது.

உண்மையில், காஷ்மீர் விவகாரம் இந்தோ-பாகிஸ்தான் அக-ற்ற அரசியலில் தந்திரமானதும் மிகமுக்கியமானதுமான அம்சமாக காணப்படுகின்றது. நாம் ஆரம்பத்திலிருந்து ஒரு விடயத்தினை ஒப்புக்கொள்ள வேண்டும் எந்தவொரு இந்திய அரசாங்கமும் உள்ளூர் அரசியல் பரம்பரியத்திலிருந்து காஷ்மீர் விவகாரத்தினை கருத்தியாக தீர்த்துவைப்பதற்கு முன்வரவில்லை என்பதே திருஷ்டமான உண்மை. தெற்காசிய பாதுகாப்பு நிலைமையானது இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கிடையிலான யுத்த வரலாறு காரணமாக காஷ்மீர் விவகாரத்துடன் நேரடியாக தொடர்புபடுகின்றது.

மேலும், பிரதிய ஏவிசார் அரசியலில் ஆதிக்கம் செலுத்துகின்ற வல்லரசுகள் இயற்கை வளம், புவியியல் பண்புகள், விவசாய பொருளாதாரம், நீரியல் தலைமுறை, குலோபாய முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடங்கள், அணுவாயுத கருவியினை அதிகரித்தல் போன்ற விடயங்களிலும் தாக்கத்தினை செலுத்துகின்றன.

பிரதிய பாதுகாப்பிற்கு காஷ்மீர் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த சர்ச்சைகள் அச்சுறுத்தலாகின்றன. இவ்வாறு இந்த அணுவாயுத அரசுகளுக்கிடையிலான பிரச்சினையை தீர்ப்பதனை தவிர்த்து அதற்கு கீழ்ப்படுதல் பிரதியக்கினை முரண்பாட்டிற்கான தள்ளிவிடும் எனலாம்.

எனவே பிரதியத்தில் நிரந்தர சமாதானத்தினை உருவாக்க காஷ்மீர் விவகாரம் சர்வதேச சமூகத்தினால் தீர்க்கப்படவேண்டும்.

இனவாதத்தின் மூலம் மு.கா மக்களை ஏமாற்றுகின்றது

உதுமாலெப்பை

நியாஸ் ஆதம்

நடைபெறவுள்ள பிரதேச சபைத் தேர்தலில் கிழக்கு முஸ்லிம்கள், தமக்கு இறைவனால் வழங்கப்பட்டுள்ள வாக்குரிமையை ஆயுதமாக பயன்படுத்தி முஸ்லிம்கள் மத்தியில் இனவாதத்தினை உருவாக்கி முஸ்லிம்களை ஏமாற்றும் முஸ்லிம் காங்கிரசுக்கு கிழக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்ட வேண்டும் என கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரும், தேசிய காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான எம்.எல்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

மூதூர் பிரதேச சபை தேர்தலில் தேசிய காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து மூதூர் நகரில் இடம் பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கிழக்கு மாகாணத்தின் பாரம்பரிய பிரதேசமான மூதூர் பிரதேசம் மூவின மக்களும் ஒற்றுமையாக வாழும் பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் தமிழ் மக்களின் சாத்வீக அரசியல் போராட்டத்தில் முஸ்லிம்கள் இணைந்து செயல்பட்டு ஒற்றுமையாக தமிழ் - முஸ்லிம் மக்கள் வாக்களித்து முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகளை பாராளுமன்றம் அனுப்பிய வரலாறுகள் மூதூர் மண்ணுக்கு உள்ளது.

புனித அல்குர்ஆனையும், ஹதீஸையும் யாப்பாகக் கொண்டு மறைந்த பெருந்தலைவர் அஷ்ரப் அவர்களினால் உருவாக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களின் உணர்வுகளை ஒவ்வொரு தேர்தலிலும் தூண்டி கிழக்கு மாகாண மக்களின் வாக்குகளைப் பெற்று மொத்த வியாபாரம் செய்துள்ள வரலாறுகளை இன்று முன்னாள் முஸ்லிம் காங்கிரஸ் அமைச்சர்களான பஷீர் சேகுதாவூத், ஹஸன் அலி உட்பட பல உயர்பீட உறுப்பினர்களும் மக்கள் மத்தியில் தெரிவித்து வருகின்றனர்.

தேர்தலில் மக்களின் வாக்குகளைப் பெற வேண்டும் என்பதற்காக தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் அதாஉல்லாவும், தேசிய காங்கிரசும் ஒரு போதும் இனவாதத்தினை ஒரு போதும் பேசியதுமில்லை, இனவாதத்தினை ஆதரிப்பதுமில்லை. இன்று நமது கிழக்கு மாகாணத்தில் நிலவுகின்ற அமைதியான சூழ்நிலைக்கும், மூவின மக்களின் இன உறவுக்கும் பாரிய பங்கினை தேசிய காங்கிரஸ் வழங்கியுள்ளது என்பது வரலாற்று உண்மையாகும்.

எனவே, மூதூர் பிரதேசத்தின் அபிவிருத்திக்கும், இன ஒற்றுமைக்கும் எதிர்வரும் பிரதேச சபைத் தேர்தலில் தேசிய காங்கிரஸின் வேட்பாளர்களை ஆதரிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

பெல்லன்வில ...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

யவர் என்றும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா தெரிவித்துள்ளது.

மேலும், மறைந்த பெல்லன்வில விமலரதன தேரரின் இறுதிக்கிரியைகள் அரச அனுசரணையுடன் நடத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி கலாநிதி பெல்லன்வில விமலரதன தேரரின் இறுதி கிரியைகள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

7 மணி முதல் ...

(முன்பக்கத் தொடர்ச்சி...)களின் முடிவுகளை வெளியிட அதிக நேரம் தேவைப்படும்.

தேர்தல் முடிவுகளை வெளியிடக் கூடிய சரியான நேரத்தை கூறுவது கடினம். ஆனால் நாங்கள் இரவு 7 மணிக்கும் 8 மணிக்கும் இடையில் ஆரம்ப முடிவுகளை வெளியிட முடியும் என்று எதிர்பார்க்கிறோம்.' என்றும் அவர் தெரிவித்துள்ளார்

பைத்தல் முகத்தஸ்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பாடு செய்திருந்தது.

இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ள பைத்துல் முகத்தஸ் தரிசிப்பதற்காக எதிர்காலத்தில் இலங்கையில் இருந்து யாத்திரிகர்களை அழைத்துச் செல்லும் நோக்கிலேயே த டிரவலர் திருவளத்தின் முகாமைத் தலைவர் நில்மி நியாழ் இதனை ஏற்பாடு செய்திருந்தார்.

குவைத் விமான சேவை மூலம் ஜோர்தான் மற்றும் பலஸ்தீனுக்கான இலங்கை தூதுவர்களது கூட்டு முயற்சியால் ஜோர்தானுக்கு வருகை தந்து ஜோர்தானில் இருந்து இஸ்ரேலிய எல்லையினூடாக ஜெருஸலத்திற்கு பயணித்த இத்தூதுக்குழு, இரண்டு நாட்கள் தங்கியிருந்து மஸ்ஜிதுல் அக்ஸாவில் ஜும்ஆ தொழுகை உட்பட பல மத நிகழ்வுகளில் ஈடுபட்டது.

மஸ்ஜிதுல் அக்ஸாவை இஸ்ரேல் படையினர் தம் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். அவர்களின் காவல் அரண்களை தாண்டியே அங்கு செல்லவேண்டும். மஸ்ஜிதுல் அக்ஸாவில் நினமும் ஆயிரக்கணக்கான வெளிநாட்டவர்கள் வந்துசெல்கின்றனர் . இலங்கையின் குழுவினர் வியாழனன்று மஃரிப் தொழுகைக்கு அங்கு சென்று இஷா தொழுகை, 'பஜ்ர் தொழுகை பின்னர் வெள்ளியன்று ஜும்ஆ தொழுகையில் பூரணமாக கலந்துகொண்டது. அன்று 10ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஜும்ஆவில் கலந்துகொண்டிருந்தனர். வெளி நாட்டவர்களுக்கு மிக இலகுவாக வந்து செல்லும் வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும் உள்நாட்டில் வாழ்கின்ற பலஸ்தீனர்களுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகின்றது.

மஸ்ஜிதுல் அக்ஸாவின் தலைமை இமாம் கலாநிதி இக்ரிமா ஜும்ஆ குத்பா நிகழ்த்தினார். அவரை பிரத்தியேகமாக சந்திக்கும் வாய்ப்பு இலங்கையின் இலங்கையிலிருந்து சென்றவர்களுக்கு கிடைத்தது. அவர் இலங்கைப் பிரதிநிதிகளுடன் மகிழ்ச்சியாக உரையாடி இலங்கைக்கு வாழ்த்தும் தெரிவித்தார். இது இலங்கையின் யாத்திரிகர்களுக்கு மஸ்ஜிதுல் அக்ஸாவைத் தரிசிப்பதற்கான ஓர் முன்னேற்பாடாகும். குழுவில் இருந்த பிரபல உலமாக்கள் இஸ்லாமிய வரலாற்று முக்கியத்துவத்தை உணர்த்தி வழிகாட்டினார்கள். புனித மக்கா மதீனா போன்று ஒவ்வொரு முஸ்லிமும் பயணிக்க ஆசைவைக்கவேண்டிய ஒரு தனமே பைதுல் முகத்திஸ்.

ஜோர்தான் விமான நிலையத்தில் அந்நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் முஹம்மத் லாபிரும், மஸ்ஜிதுல் அக்ஸாவில் இலங்கைக்காக பலஸ்தீன தூதுவர் பௌஸான் அன்வரும் இலங்கை குழுவினரை வரவேற்றது குறிப்பிடத்தக்கது.

மாலைதீவு ஜனாதிபதிக்கு ...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மொன்றை தாக்கல் செய்யவுள்ளதாகவும், பாராளுமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை கொண்டுவர இருப்பதாகவும் அந்நாட்டு செய்திகள் வெளியாகியுள்ளன.

மாலைதீவில் அரசியல் நெருக்கடி உக்கிரமடைந்துள்ளதாகவும் இராணுவம் ஆட்சியை கைப்பற்றக்கூடிய சூழ்நிலை நிலவுவதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்திய பெருங்கடலில் உள்ள மாலத்தீவுகள் நாட்டின் தற்போதைய அதிபர் யாமீன் அப்துல் கயூமை கொலை செய்ய சதித் திட்டம் தீட்டப்பட்டதாக முன்னாள் அதிபர் மீது குற்றம் சாட்டப்பட்டது. மேலும் சிறையில் உள்ள கைதிகளை விடுவிக்க திட்டம் தீட்டியதாகவும் குற்றம் சாட்டப்பட்டது. இது தொடர்பாக அந்நாட்டின் முன்னாள் அதிபர் முகமது நசீது, முன்னாள் துணை அதிபர் அகமது அதீப் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் கடந்த ஆண்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

உடல்நலக்குறைவை காரணம் காட்டி பிரிட்டனில் சிகிச்சை பெற முகம்மது நசீது நாட்டை விட்டு வெளியேறினார். பல எதிர்க்கட்சி தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதால், வரும் அதிபர் தேர்தலில் போட்டியின்றி தேர்வாகலாம் என அதிபர் யாமீன் அப்துல் கயூம் கணக்கு போட்டிருந்தார். அவரது கனவை கலைக்கு நூறாக உடைக்கும் விதமாக அந்நாட்டு உச்ச நீதிமன்றம், அரசியல் காரணங்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என சில நாட்களுக்கு முன் உத்தரவிட்டது. மேலும், எந்த குற்றச்சாட்டில் அவர்கள் கைது செய்யப்பட்டார்களோ, அது தொடர்பான வழக்கில் எந்தவிதமான நெருக்கடியும் இல்லாமல் நேர்மையான முறையில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

எதிர்க்கட்சி எம்.பி.க்கள் 12 பேர் தகுதி நீக்கம் செய்த அதிபரின் உத்தரவையும் நீதிபதிகள் ரத்து செய்தனர். நீதிமன்றத்தின் தீர்ப்பை அடுத்து நகரத்தின் ஆதரவாளர்கள் நள்ளிரவில் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை போலீசார் கட்டுப்படுத்த முயன்ற போது கலவரம் வெடித்தது. இதற்கிடையே, 85 பேர் கொண்ட அந்நாட்டு பாராளுமன்றத்தில் தகுதி நீக்கம் செய்யப்பட்ட 12 எம்.பி.க்கள் இடம்பெற்றால், ஆளும் கட்சியை விட எதிர்க்கட்சி அதிக இடங்களை பெற்று விடும். இதனால், யாமீனின் பதவிக்கு நெருக்கடி ஏற்படும் என்பதால், நீதிமன்றத்தின் உத்தரவை ஏற்க முடியாது என யாமீன் கூறினார். இந்நிலையில், இந்த ஆண்டு நவம்பர் மாதம் நடக்க உள்ள அதிபர் தேர்தலை முன்கூட்டியே நடத்தும் திட்டம் வைத்துள்ளதாக, யாமீன் தனது ஆதரவாளர்களிடம் பேசியுள்ளார். நாளை பாராளுமன்றம் கூட வேண்டிய நிலையில், 12 எம்.பி.க்கள் அவைக்குள் வந்தால் தனது பதவி பறிபோய்விடுமோ என்ற பயத்தில் பாராளுமன்ற கூட்டத்தினை அதிபர் ஒத்திவைத்துள்ளார். கோர்ட் உத்தரவை ஏற்காத அதிபரை பதவி நீக்கம் செய்வதற்கான வழிமுறைகளை செயல்படுத்த சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி முடிவு செய்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அரசியல் நெருக்கடி முற்றிய நிலையில், ராணுவ ஆட்சி கூட அங்கு கொண்டு வரப்படலாம் என்ற சூழல் நிலவுவதாகவும் சர்வதேச ஊடகங்கள் கூறுகின்றன. வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது இலங்கையில் இருக்கும் முன்னாள் ஜனாதிபதி முகம்மது நசீத், ஜனாதிபதித் தேர்தலில் யாமீனை எதிர்த்து போட்டியிடப்போவதாக அறிவித்துள்ளார்.

அர்ஜுன் அலோசியஸ்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸை அவரது கொழும்பு வீட்டில் வைத்தே கைதுசெய்துள்ளனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களான அர்ஜுன் அலோசியஸ் மற்றும் ககன் பலிஹேன ஆகியோரை நேற்று குற்றப் புலனாய்வு தலைமையகத்தில் வைத்து வாக்குமூலங்களை பதிவுசெய்துகொண்டுள்ளனர்.

மத்திய வங்கி பிணைமுறி தொடர்பாக ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைகள் வெளியானதைத் தொடர்ந்தே சந்தேகநபர்கள் தொடர்பான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

மத்திய வங்கி பிணைமுறி மோசடியில் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மஹேந்திரன், பெர்பேசுவல் டிரஷரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ககன் பலிஹேன ஆகியோரை சந்தேக நபர்களாக பெயரிட கோட்டை நீதவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மேலும், பிணைமுறி மோசடியில் முக்கிய சந்தேக நபராக பெயரிடப்பட்டுள்ள முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மஹேந்திரன் சிங்கப்பூரில் வசித்து வரும் நிலையில் அவரை குற்றப் புலனாய்வுப் பிரிவில் ஆஜராகுமாறு சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் அறிவித்தல் வழங்குமாறும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

சமாதானம் சக...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

எல்.ரீ.ரீ பயங்கரவாதத்தின் காரணமாக 30 வருட காலத்திற்கு பல்வேறு துன்பங்களுக்கு மக்கள் உள்ளானார்கள் . இதன் காரணமாக நாட்டின் முன்னேற்றத்திலே ஒரு பின்னடைவு ஏற்பட்டது. எல். ரீ. ரீ. பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டை பாதுகாப்பதற்காக உயிரை பணயம் வைத்து போராடிய படைவீரர்கள் பொலிசார் மற்றும் சிவில் இராணுவ வீரர்கள் உள்ளிட்டவர்கள் பாரிய அர்ப்பணிப்பை மேற்கொண்டுள்ளனர். இவர்களில் பலர் கைகால்களை இழந்து ஊனமுற்ற நிலையில் குடும்ப வாழ்க்கையையும் இழந்து தவிக்கின்றனர். இன்றைய 70ஆவது ஆண்டு சுதந்திரதினத்தை கொண்டாடும் நாளில் இவர்களுக்கு நாம் நன்றிக்கடன் பட்டுள்ளோம். இவர்களது குடும்பங்களின் நலனில் நாம் அக்கறை கொண்டுள்ளோம்.

எமது நாட்டின் அபிமானத்தை எமது நாட்டின் பெருமையை எமது கடந்த கால அனுபவங்களை பாடமாக வைத்து நாங்கள் செயற்படவேண்டும். படித்தவர்கள் புத்திஜீவிகள் முக்கியமாக தமது பங்களிப்பை இதற்காக வழங்க வேண்டும் . இன்று எங்களுக்கு இருக்க கூடிய முக்கியமான சவால் என்ன? நாம் செய்யவேண்டியது என்ன ? எதிர்காலத்தில் நன்மைக்காக நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் பணியாற்றவேண்டும். அதுதான் முக்கியமான சவாலாக இருக்கின்றது.

பொருளாதார ரீதியிலே எதிர்நோக்குகின்ற எல்லா பிரச்சினைகளுக்கும் நாங்கள் சிறப்பாக முகங்கொடுக்கவேண்டும். ஏழ்மை எங்களுக்கு இருக்க கூடிய பெரிய சவாலாக இருக்கின்றது. அந்த ஏழ்மையை , வறுமையை போக்க கடந்த காலத்தில் பணியாற்றிய போதிலும் நாம் நம் கடமைகளை இன்னும் இன்னும் சரியாக செயற்படுத்தவேண்டும். ஏழ்மை வறுமை இவற்றிலிருந்து நாம் விடுதலைபெறவேண்டும் .அதேபோன்று இங்கே இருக்க கூடிய நமது நாட்டு மக்கள் தேசிய அபிவிருத்தி பற்றி சிந்திக்கவேண்டியுள்ளது. சில செயற்பாடுகள் எமது நாட்டிற்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. எனவே தேசிய ரீதியான முக்கிய பிரச்சனைகளை அறிந்து தெரிந்து நாம் சரியாக செயலாற்ற வேண்டும். எங்களுடைய கல்வித்துறையில் இருக்கக்கூடிய கல்விமான்கள் புத்திஜீவிகளை இன்னும் இன்னும் அதிகரிக்கவேண்டும். எமது கல்வி முறையில் இன்னும் பல மாற்றங்களை நாம் ஏற்படுத்தவேண்டும். தொழில் நுட்பம், இயற்கை வளங்கள் இவை எல்லாம் மேம்படுத்தப்படவேண்டும். அப்பொழுதுதான் நம் நாட்டிலே ஒரு அபிவிருத்தியை காணக்கூடியதாக இருக்கும்.

எமது நாட்டின் பல திறைப்பிரமாணங்கள் பழைய நிதி தொடர்பான விதிகள் மிகவும் பழமை வாய்ந்ததாகும். காலத்திற்கேற்ற வகையில் இவற்றில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். ஒழுக்க விதிமுறைகளுக்கு முக்கியத்துவமளித்து நாம் செயற்படவேண்டும். தூய்மையான அரசியல் கலாச்சாரம் உருவாக்கப்படவேண்டும். அபிவிருத்தி வேலைகள் சிறப்பாக செய்யப்படவேண்டும். அபிவிருத்திக்கு அரசியல்வாதிகள் மக்களோடு இணைந்து நேர்மையாக செயற்படவேண்டும். அர்ப்பணிப்பு நம்பிக்கை இவைதான் காலத்தின் தேவை- என்றார்.

பொய் சொல்பவர்களின் வார்த்தைகளை கேட்டு ஏமாற வேண்டும்

அமைச்சர் திகாம்பம் வேண்டுகோள்

(க.கிஷோந்தன்)

கடந்த காலங்களில் மக்களுக்காக எதையுமே செய்யாதவர்கள் இன்று மலை மலையாக வந்து பல்வேறு விதமான பொய்களை கூறி வருகிறார்கள். அவர்களின் வார்த்தைகளை கேட்டு பொது மக்கள் ஏமாந்து விடக் கூடாது என மலை நாட்டு புதிய கிராமங்கள் மற்றும் சமூதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் ஐ.தே.க. வின் "யானை"? சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து அட்டன் குயில்வத்தை தோட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

அவர்கள் தோட்டத்தொழிலாளர்களின் கூட்டு ஒப்பந்தத்திற்கு கைச்சாத்திடுபவர்கள். அத்தோடு இன்று மனிதர் சேமலாப நிதி அரசாங்கம் சாப்பிட்டு விட்டதாக கூறிவருகிறார்கள். இவர்கள் என்ன தான் பொய் சொன்னாலும் நாங்கள் தான் தொடர்ந்து அமைச்சராக இருக்கப்போகின்றோம். இன்று நாங்கள் காணி உரிமையை பெற்றுக்கொடுத்துள்ளோம். மலையக அபிவிருத்தி அதிகார சபை உருவாக்கி அபிவிருத்தி பணிகளை முன்னெடுத்து வருகின்றோம். இவ்வாறான சேவைகள் தொடர்ந்தும் நடைபெறுவதற்காகவே நாங்கள் உங்களிடம் வாக்கு கேட்கின்றோம்.

இந்த அரசாங்கம் உருவானதால் தான் தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றோம். மலையக மக்களுக்காக அரசாங்கம் இன்று காணிகளை தங்கு தடையின்றி பெற்றுக்கொடுத்து வருவதடன் பல அபிவிருத்தி பணிகளையும் செய்து வருகிறது.

உங்களுக்கு கடந்த பல வருட காலமான குன்று குழியுமாக காணப்பட்ட வெலிஓயா பாதை நான் வந்த பின் தான் காபட் இட்டு புனரமைக்கப்பட்டது. அது மட்டுமல்லாது மலையகத்தில் பல பாதைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. தான் தோட்டத் தொழிலாளியின் பிள்ளை என்பதால் என்னை தூற்றுகிறார்கள். தோட்டத் தொழிலாளியின் பிள்ளைகள் தலைவர்களாக வரக்கூடாதா? சற்று சிந்தித்து பாருங்கள் சம்பள பிரச்சினைக்கு நான் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத போதிலும் உங்களுக்கு சம்பள உயர்வு கோரி போராடினேன்.

இன்று நீங்கள் எதிர்க்கட்சியில் உள்ளவர்களுக்கு வாக்களித்தால் இந்த பிரதேசத்தில் அபிவிருத்தி பணிகளை பெற்றுக்கொள்ள முடியாது. எனவே எங்களை நம்பி வாக்களித்தால் நாங்கள் ஒரு போதும் உங்களை ஏமாற்ற மாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

பிணைமுறி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

விசேட பாராளுமன்ற அமர்வை 8ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்பட வேண்டுமென்று அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் வேண்டிக்கொண்டிருந்ததைத் தொடர்ந்து கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் விடயம் நாளை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதாக உறுதியானது.

வெகு விமர்சையாக...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வத்தில் கலந்துகொண்டனர்.

பொதுமக்களுக்கும் சுதந்திர தின நிகழ்வை பார்வையிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் சிறப்பம்சமாகும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேசிய கொடியேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்ததோடு, கொழும்பின் பிரபல 10 சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் பாடசாலைகளின் 110 மாணவ, மாணவியர் தேசிய கீதம் இசைத்தனர்.

இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாடு, சுயாதீன தன்மை ஆகியவற்றுக்காக தமது உயிரை தியாகம் செய்த அனைத்து இலங்கையர்களையும் நினைவு கூருவதற்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கு மரியாதை செலுத்தும் வகையில் 21 மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதியின் உரை இடம்பெற்றது. உரையைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான முப்படை, பொலிஸார், மற்றும் சிவில் பாதுகாப்பு படையணிகளின் பங்குபற்றலுடன் மரியாதை அணிவகுப்பு மற்றும் பாடசாலை மாணவர்களின் கலாசார ஊர்வலமும் நடைபெற்றது.

நிகழ்வின் இறுதியில் தொடர்ந்தும் மூன்றாவது வருடமாகவும் தேசிய கீதம் தமிழில் இசைக்கப்பட்டது சிறப்பம்சமாகும்.

மாலைதீவு ஜனாதிபதிக்கு ...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

உடன்படுவார்களென தாம் எதிர்பார்த்திருப்பதாகவும் நிலைமையை சுமுகமாக முறையில் தீர்த்துக்கொள்ள சகல தரப்பும் முயற்சிக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு

கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம்

அத்தியாவசிய உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் சகல நிறுவனங்களுக்குமான அறிவித்தல்

கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி வகைகள் மொத்த விற்பனைக்கு கீழ்வரும் களஞ்சியசாலைகளில் இருந்த உடன் பணத்துக்கு அல்லது வங்கி வரைவு மூலமே பெற்றுக்கொள்ள முடியும். அந்தப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு தங்களால் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் சந்தையில் இரண்டு வருடத்துக்கு அதிககாலம் வர்த்தகம் செய்யப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு வியாபார தாபனம் பதிவு செய்யப்பட்ட உறுதிப்பத்திரத்துடன் அடையான அட்டையின் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோ பிரதியும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இதன்போது ஒரு முறைக்கு ஒரு அரிசிவகையை விலைக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய உச்சபட்ச பிரமாணம் 100 மெற்றிக் தொன்னுக்கு மட்டுப்படுத்தப்படும்.

போக்குவரத்துச் செலவுகளை தாங்களே பொறுப்பேற்க வேண்டுமென்பதுடன் கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம் மூலம் பெற்றுக்கொள்ளும் அரிசி வகைகள் அந்தப் பெயருடன் கூடிய உறையுடன் மாத்திரமே விற்பனை செய்யப்பட வேண்டும்.

மேலும் இவ்வகை அரிசி வகைகளின் கீழ்காணும் உச்ச சில்லறை விலையின்கீழ் விற்கப்பட வேண்டும் என்பதையும் தயவு செய்து கவனிக்கவும்.

அரிசி வகைகள்	மொத்த விலை (1கி.கிராம்)
1. இறக்குமதி செய்யப்பட்ட நாட்டரிசி	ரூபா. 65.00
2. இறக்குமதி செய்யப்பட்ட பொன்னி சம்பா	ரூபா. 66.00
3. இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளை அரிசி	ரூபா. 59.00

அரிசியை விலைக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய களஞ்சியசாலைகள்

கிளிநொச்சி - 0372220158	அநுராதபுரம் - 0242054510
யாழ்ப்பாணம் - 071 8032448, 041 2235300	பொலன்னறுவை - 076 4549372
திருகோணமலை - 071 8289737	510 வெலி - உதுல் விநியோக மத்திய - 0112 430466
மொனறாகலை - 0778 738007	512 வெலி - உதுல் விநியோக மத்திய - 0778 034383
மாத்தறை - 0778 738007	மிரிஹான - 071 2926502
கொழும்பு - 0778 738007 - 071 7213814	உக்கிலா கெங்கால - 076 6413650
பதுளை - 071 6469747	ஒருகொடவத்த - 071 4451224
மொனறாகலை - 071 9594656	

தொடர்புகளுக்கு - தொலை 0112 302750 பெக்ஸ் - 0112 323714 Email: cwemktg@gmail.com

தலைவர்
கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம்
27, வொக்ஹோல் வீதி,
கொழும்பு-2.

Sports
விளையாட்டுச் செய்திகள்

மொமினுல் ஹக்யூ சதத்தால் தப்பியது பங்களாதேஷ் அணி

பங்களாதேஷ் மற்றும் இலங்கைக்கிடையிலான முதல் டெஸ்ட் சிட்டகாங்கில் நடைபெற்று வருகிறது. டொஸ் வென்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த பங்களாதேஷ் 513 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் முதல் இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி குசால் மெண்டிஸ் (196), தனஞ்ஜெயா டி சில்வா (173), ரோஷன் சில்வா (109) ஆகியோரின் சதத்தால் 9 விக்கெட் இழப்பிற்கு 713 ஓட்டங்கள் குவித்து இலங்கை அணி முதல் இன்னிங்ஸை டிக்ளேர் செய்தது.

சரியாக 200 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் பங்களாதேஷ் அணி 2-வது இன்னிங்ஸை தொடங்கியது. தமிம் இக்பால் (41), இம்ருல் கெய்ஸ் (19), முஷ்பிகுர் ரஹிம் (2) சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க பங்களாதேஷ் நேற்றைய 4வது நாள் ஆட்ட முடிவில் 81 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 3 விக்கெட்டுக்களை இழந்திருந்தது. மொமினுல் ஹக்யூ 18 ஓட்டங்கள் எடுத்த நிலையில் களத்தில் இருந்தார்.

இன்று கடைசி நாள் ஆட்டம் தொடங்கியது. மொமினுல் ஹக்யூடன் விக்கெட் கீப்பர் லித்தோன் தாஸ் ஜோடி சேர்ந்தார். இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்கவே பங்களாதேஷிற்கு 119 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

இருவரும் பொறுப்பை உணர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். ஐந்தாவது நாள் ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமாக இருந்த போதிலும், அதனை எதிர்கொண்டு ஓட்டங்கள் சேர்த்தனர்.

கடைசி நாள் மதிய உணவு இடைவேளை வரை இருவரும் விக்கெட் இழக்காமல் விளையாடினார்கள். பங்களாதேஷ் 3 விக்கெட் இழப்பிற்கு 187 ஓட்டங்கள் எடுத்திருந்தது. மொமினுல் ஹக்யூ 70 ஓட்டங்களுடனும், லித்தோன் தாஸ் 47 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

மதிய உணவு இடைவேளை முடிந்து ஆட்டம் தொடங்கியதும் லித்தோன் தாஸ் அரை சதம் அடித்தார். வங்காள தேசம் 200 ஓட்டங்களைத் தொட்டு ஸ்கோரை டெவன் செய்தது.

சிறப்பாக விளையாடிய மொமினுல் ஹக்யூ 154 பந்தில் 5 பவுண்டரி, 2 சிக்சருடன் சதம் அடித்தார். முதல் இன்னிங்சிலும் மொமினுல் ஹக்யூ (176) சதம் அடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பங்களாதேஷ் அணியின் ஸ்கோர் 261 ஓட்டங்களாக இருக்கும்போது இந்த ஜோடி பிரிந்தது. மொமினுல் ஹக்யூ 105 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் விளையாடிய லித்தோன் தாஸ் 94 ஓட்டங்களில் ஆட்டமிழந்து சதம் அடிக்கும் வாய்ப்பை இழந்தார்.

சதத்தை தவறவிட்ட லித்தோன் தாஸ்

4.ஆவது விக்கெட்டுக்கு இந்த ஜோடி 185 ஓட்டங்கள் குவித்தது. இதனால் பங்களாதேஷ் அணி தோல்வியில் இருந்து தப்பியது. அத்துடன் போட்டி டிராவை நோக்கிச் சென்றது.

6-வது விக்கெட்டுக்கு கேப்டன் மெஹ்முதுல்லா உடன் மொசாடெக் ஹொசைன் ஜோடி சேர்ந்தார். கடைசி நாள் தேநீர் இடைவேளை வரை பங்களாதேஷ் 5 விக்கெட் இழப்பிற்கு 281 ஓட்டங்கள் எடுத்துள்ளது. மொமினுல் ஹக்யூ 12 ஓட்டங்களுடனும், மொசாடெக் ஓட்டங்கள் ஏதும் எடுக்காமல் களத்தில் உள்ளனர்.

இன்னும் 30 ஓவர்கள் மீதமுள்ளன. பங்களாதேஷ் 81 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ள நிலையில் கைவசம் 5 விக்கெட்டுக்கள் உள்ளன. இதனால் போட்டி டிராவில் முடிய அதிக வாய்ப்புள்ளது.

தென்னாபிரிக்க அணியின் தலைவராக எய்டன் மார்க்ரம்

ஏ.அலி சிஹாப்

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் மற்றும் டி20 போட்டித் தொடருக்கான தென்னாபிரிக்க அணியின் தலைவராக இளம் வீரர் எய்டன் மார்க்ரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

முதலாவது ஒருநாள் போட்டியின் போது, தென்னாபிரிக்க அணியின் தலைவரான டு பிளெஸிக்கு கைவிரலில் காயம் ஏற்பட்டது. இதனால் உபாதையிலிருந்து மீள ஆறு வாரங்கள் தேவைப்படும் என மருத்துவர்கள் அறிவித்தனர். இதனால் மீதமுள்ள போட்டிகளில் இருந்து விலகுவதாக அறிவித்தார்.

சர்வதேச அளவில் 2 போட்டிகள் மட்டுமே பங்கேற்ற அனுபவம் கொண்ட மார்க்ரம், 23 வயதுக்குட்பட்டோருக்காக அணியின் தலைவராக செயற்பட்டுள்ளார். முதல்தர போட்டிகளில் மார்க்ரமின் செயல்பாடு சிறப்பாக இருந்ததால், இவர் அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக, காயம் காரணமாக ஏ பி டி வில்லியர்ஸ் 3 போட்டிகளுக்கு ஓய்வை அறிவித்திருந்தார். இதனால், இக்கட்டான நிலைக்கு தென்னாபிரிக்க அணி தள்ளப்பட்டது. டுமினி, அம்லா, குயின்டன் டி குக் ஆகியோரின் பெயரும் மொழியப்பட்டது. இந்நிலையில், யாரும் எதிர்பாரா நிலையில், சர்வதேச அளவில் 2 போட்டிகள் மட்டுமே பங்கேற்ற அனுபவம் கொண்ட இளம் வீரர் எய்டன் மார்க்ரம் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மீதமுள்ள ஒருநாள் போட்டிகளுக்கும், டி20 போட்டிகளுக்கும் அணித்தலைவராக இவரே செயற்படுவார் எனத் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

U-19 உலகக்கிண்ணம்: 4ஆவது தடவையாக இந்தியா சம்பவம்

12.ஆவது இளையோருக்கான உலகக்கிண்ண தொடரின் இறுதிப் போட்டி நியூசிலாந்தில் கடந்த சனிக்கிழமை (03) நடைபெற்றது. பிரிதிவி ஷோ தலைமையிலான இந்திய அணி நான்காவது தடவையாக (2000, 2008, 2012, 2018) கிண்ணத்தை கைப்பற்றியது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸி. அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. ஆரம்பத்திலேயே ஆஸி. அணி 59 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

நான்காவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த ஜொனதன் மெர்லோ மற்றும் பரம் உப்பல் ஜோடி 75 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்று அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தியது. நிதானமாக ஆடிய மெர்லோ 72 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். இறுதியில் ஆஸி. அணி 47.2 ஓவர்களில் 216 ஓட்டங்களை பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலெடுத்தாட இந்திய அணிக்கு ஆரம்ப வீரர்களான அணித்தலைவர் பிரிதிவி ஷோ மற்றும் மன்ஜோத் கால்ரா ஆகிய இருவரும் 71 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்து கொண்டனர்.

பின்னர் இரண்டாவது விக்கெட்டுக்காக மன்ஜோத் கால்ரா, சுப்மான் கில்லுடன் சேர்ந்து 60 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டார். சுப்மான் கில் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஹார்விக் டேசாயுடன் 3.ஆவது விக்கெட்டுக்கு பிரிக்கப்படாத இணைப்பாட்டமாக 89 ஓட்டங்களை பகிர்ந்துகொண்ட மன்ஜோத் கால்ரா இந்திய அணிக்கு இம்முறை இளையோர் உலகக் கிண்ணத்தை வென்றுகொடுத்தார்.

இந்திய இளையோர் அணி 38.5 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 220 ஓட்டங்களை பெற்று மிக இலகுவாக கிண்ணத்தை கைப்பற்றியது.

102 பந்துகளுக்கு முகம்கொடுத்த மன்ஜோத் கால்ரா 8 நான்கு ஓட்டங்கள் மற்றும் 3 ஆறு ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது 101 ஓட்டங்களை பெற்று ஆட்ட நாயகன் விருதை வென்றார்.

நடைபெற்ற உலகக் கிண்ண போட்டியில் அதிக ஓட்டங்கள் பெற்றவர்கள் வரிசையில் மேற்கிந்திய தீவுகளின் அலிக் அதெனசேலுக்கு (418) அடுத்தாக 1 சதம் 3 அரைச்சதங்களுடன் இரண்டாவது இடத்தில் இருக்கும் சுப்மான் கில் தொடர் நாயகனுக்கான விருதை வென்றார்.

கிண்ணத்தை கைப்பற்றியதை தொடர்ந்து இந்திய இளையோர் அணிக்கு அந்நாட்டு கிரிக்கெட் சபை குறிப்பிட்ட தொகை பணப் பரிசையும் அறிவித்துள்ளது. அணியின் பயிற்சியாளரான இந்திய அணியின் முன்னாள் தலைவர் ராகுல் ராவிட்டுக்கு ரூ50 இலட்சமும் (இந்திய ரூபாய்), ஏனைய அணி வீரர்கள் ஒவ்வொருவருக்கு தலா ரூ20 இலட்சமும் பரிசாக வழங்கப்படவுள்ளது.

இத்தொடரில் இலங்கை இளையோர் அணி ஆரம்பப்போட்டிகளில் சோபிக்காமல் பிரதான கற்றில் இருந்து வெளியேறியது. இருந்தாலும் பிளேட் கிண்ணத்திற்கான போட்டிகளில் வெற்றி பெற்று தொடரின் 9 ஆவது இடத்தை பிடித்தமை குறிப்பிடத்தக்கது.

சாய்ந்தமருதில் சுதந்திரதின நிகழ்வுகள்

(எம்.வை. அமீர், எம்.ஐ.எம். அஸ்ஹர், டீ.கே. காலித்தீன்)

சுதந்திரம் கிடைத்து 70 வருடங்கள் கழிந்துள்ளதைக் கொண்டாடும் இலங்கைத் தாய் நிரு நாட்டின் மக்களுடன் அவர்களது மகிழ்வில் சாய்ந்தமருது மக்களும் இணைந்து மகிழ்வுறுவதாகவும் நாட்டில் நிரிவாகங்கள் பரவலாக்கப்பட்டு பிரதேசங்கள் அபிவிருத்தி கண்டுவரும் இந்த சந்தர்ப்பத்தில் சாய்ந்தமருது மக்களும் தங்களை தாங்களே ஆள வேண்டும் என்ற அவாவுடன் இருக்கின்ற இந்த சந்தர்ப்பத்தில் சாய்ந்தமருது மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொடுக்க அரசு முன்வரவேண்டும் என பள்ளிவாசலின் தலைவர் வை.எம்.ஹனிபா கூறினார்.

தங்களது எதிர்பார்ப்புக்கள் நிறைவேறவில்லையென்ற மன ஆதங்கத்துக்கு மத்்தியிலும் இலங்கையின் 70 ஆவது சுதந்திரதின பிரதான நிகழ்வில் வெளிவிடப்படும், 1000 ரூபாய் தாள யத்தாளில் பல நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த சாய்ந்தமருது பள்ளிவாசலின் முகத்தோற்றம் பொறிக்கப்பட்டிருப்பதைக் கொண்டாடும் நிகழ்வாகவும் சாய்ந்தமருது பிரதான வீதி அலங்கரிக்கப்பட்டு பிரதான நிகழ்வுகள் பள்ளிவாசல் முற்றலில் சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் தலைவர் வை.எம்.ஹனிபா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட இராணுவ கட்டளை விடும் அதிகாரி மற்றும் சட்டம் ஒழுங்கு மற்றும் தென்மாகாண அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர் ஏ.எம்.எம்.சலீம், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் ஐ.எம்.ஹனிபா, முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி மைமுனா, ஊர் பிரமுகர்கள்,உலமாக்கள், வர்த்தக சங்க பிரதிநிதிகள் உள்ளூர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மாணவர்கள் என பெரும்திரளானோர் பங்குகொண்டிருந்த இந்நிகழ்வில் அதிதிகள் ஊர்மக்கள் புடைசூழவினால் தேசியக்கொடி ஏற்றப்பட்டதுடன் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் நாட்டிலுள்ள அனைத்து மக்களின் நல்வாழ்வுக்காகவும் நாட்டில் வளமான சுபிட்சம் அமைதியான சுதந்திரமான ஒற்றுமையான சூழல் ஏற்படவும் விசேட துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றது. மாளிகைக்காடு பிரதான வீதியிலுள்ள பள்ளிவாசலில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் பொலிஸ் பாவாபைத் பாடசாலை மாணவர்களின் பங்களிப்புகளுடன் சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் வரை இடம்பெற்றது.

சாய்ந்தமருது - மாளிகைக்காடு பிரதேசம் எங்கும் சுதந்திர தினத்திற்கு வாழ்த்துத் தெரிவிக்கும் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளதுடன் பிரதான வீதி உள்ளூர் வீதி வர்த்தக நிலையங்கள் அரச நிறுவனங்கள் தனியார் நிறுவனங்கள் வங்கிகள் பாடசாலைகள் வீடுகள் வாகனங்கள் போன்றவற்றில் பெரும் தொகையில் தேசியக் கொடிகள் பறக்க விடப்பட்டன.

ஜனநாயகரீதியிலான வன்முறைகளற்ற தேர்தல் இடம்பெறவேண்டும்

நல்லிணக்க குழு இணைப்பாளர் கூறுகிறார்

(திகாமடுல்ல நிருபர்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வன்முறைகளற்றதும், அமைதியானதும், சுதந்திரமானதாகவும் நடைபெற வேண்டும் என, அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களில் போட்டியிடும் வேட்பாளர்களிடமும், கட்சிகளிடமும் சமாதானமும் சகுகப்பணியும் (பீ.சீ.ஏ) நிறுவன வழிகாட்டலில் அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு நல்லிணக்க குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாக அக்கரைப்பற்று நல்லிணக்க குழுவின் இணைப்பாளர் ஏ.ஜீ.ஏ.கபூர் தெரிவித்தார்.

முஸ்லிம், தமிழ், சிங்களம் ஆகிய மூவின மக்களுக்கிடையிலும் சமாதானம் மற்றும் சகவாழ்வை ஏற்படுத்தும் நோக்கில் சமாதானத்திற்கும் சகுகப்பணிக்குமான நிறுவனத்தின் அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு பிரதேச செயலகப் பிரிவுகளில் ஏற்படுத்தப்பட்ட நல்லிணக்கக் குழுக்கள் இணைந்து நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பு அண்மையில் ஆலையடிவேம்பு விபுலானந்தா நிறுவர் இல்லத்தில் நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் எம்.எல். ஜெலில் தலைமையில் நடைபெற்றபோதே மேற்படி கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு சுதந்திரமானதும் ஜனநாயக பாரம்பரியங்களுக்கு மதிப்பளிக்கக் கூடியதும், நீதியானதுமான தேர்தல் நடைமுறையிருக்க வேண்டும். இம் முறை மூலம் மட்டுமே மக்களின் விருப்பத்திற்கும் ஜனநாயகத்திற்கும் எதிர்காலத்தில் உண்மையான பெறுமதி கிடைக்கும்.

வன்முறைக்கலாசாரத்தை இல்லொழித்து நீதியும் நியாயமுமான தேர்தல் நடை பெறுதலை உறுதிப்படுத்துவதற்கு எல்லோரும் பங்களிப்புச் செய்ய வேண்டும் என்று எமது நல்லிணக்க குழு வேட்பாளர்களையும், பொறுப்பு வாய்ந்தவர்களையும் சமூகத்தின் சார்பில் விநயமாக கேட்டுக் கொள்கிறது இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார். இவ் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட ஆலையடிவேம்பு நல்லிணக்கக் குழு இணைப்பாளர் ரீ.கைலாயபிள்ளை மற்றும் உறுப்பினர் கே.துளசிமணி மற்றும் பலரும் உரையாற்றினர்.

வேவல்தெனிய அல் ஹஸன் வித்தியாலயத்தில் இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் பாடசாலை அதிபர் எம்.ஏ.எம். ஆஸிம் தலைமையில் இடம்பெற்றது. பரகத் ரஹ்மத் இல்லங்களின் பொறுப்பாளர்களான ரில்வானியா,ஸபீனதுல் முனவ்வரா, பாடசாலை அதிபர்,கோட்டக் கல்விப் பணிப்பாளர் லக்ஷ்மி மெண்டிஸ் ஆகியோர் கொடிகளை ஏற்றுவதையும் விஷேட அதிதிகளான எம்.எம்.ஏ. இஸ்மாயில், எம்.ஐ.ஏ.எம். ஸப்வான் ஆகியோர் பரிசில்கள் வழங்குவதையும் விளையாட்டு நிகழ்வுகளின் சில பகுதிகளையும் படங்களில் காணலாம்.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 05TH FEBRUARY 2018